Registered as a NewsPaper

பக்கங்கள் – 12

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–17 | 01–07–2004 | வியாழக்கிழமை | ஓசை –134

தாங்நகை வாணிபத்தில்
அன்றும் இன்றும் என்றும்
மக்கள் மனதில் நிறைந்தவர்கள்
சாரங்கன் நகை மாடம்
அன் சென்ரர்
இல. 45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021-2226059
(சீ-10111)

### சமாதான முயற்சிகளில் சனாதிபதிக்கு ஆர்வமிருப்பின்

# கருணாவை வைத்துக்கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதைத்தவிர்க்க வேண்டும்

## நோர்வேக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சனாதிபதியும் அரசாங்கமும் சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வமாக இருந்தால் கருணாவை வைத்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களுக்கும் யுத்தநிறுத்தச் சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கின்ற காரியங்களை மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டும் என்பதே எங்கள் தலைமைப்பீடத்தின் கரிசனையாக உள்ளது என்பதை நோர்வே அனுசரணையாளர்களுக்கு எடுத்துக்கூறியிருக்கின்றோம் என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்

* இன்று நடந்த பேச்சுக்கள் எதனை மையமாகக் கொண்டு அமைந்திருந்தன. எவ்வாறான கருத்துக்கள் பரிமாறப்பட்டன?

இன்றைய பேச்சுக்களின் போது முக்கியமாக இன்றுள்ள நிலைமைகள் தொடர்பாக அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேத் தரப்புக்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறோம், தற்போது மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள் முக்கியமாகக் கருணாவுக்கு படைத்தரப்பு அடைக்கலம் கொடுத்து வைத்துக் கொண்டு கருணாவை வைத்து அங்கே பெரும் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலமைகளை இன்று அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் எரிக்சூல்ஹெய்ம் நேற்றுச்சந்திப்பு

### இன்று சனாதிபதியைச் சந்திப்பார்

(கொழும்பு)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்து சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் கொழும்பிற்குச் சென்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன் போது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக எடுத்துக்கூறியுள்ளார். இதேவேளை எரிக்சூல்ஹெய்ம் இன்று சனாதிபதி சந்திரிகாவை சந்திக்கவுள்ளார். இதற்கு முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை இவர் தனது நாட்டிற்குத் திரும்பி அங்கிருந்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் அவர்களுடன் இந்தியாவிற்குச் சென்று அங்கு சமாதான நகர்வுகள் தொடர்பான விளக்கங்களை தெரிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. (32)



## தொண்டமானை இணைத்துக்கொள்ள ஆளும்கட்சி தொடர்ந்து தீவிரமுயற்சி

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைத் தம்முடன் இணைத்துக்கொள்ளும் முயற்சியில் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் இது தொடர்பாக இ. தொ. கா. தலைவர் ஆறுமுகம தொண்ட மானுடன் பேச்சுக்கள் நடைபெற்றதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னர் அமைச்சர் மங்கள சமரவீர, ஆறுமுகம் தொண்டமானுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது அது பயனற்றுப்போயிருந் தது. இப்பொழுது கடந்த செவ்வாய்க் கிழமை அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பம் கேட்கும் படையினர்

(மட்டக்களப்பு)

மாங்கேணி சிறிலங்கா இராணுவச் சோதனைச்சாவடி ஊடாகச் செல்லும் வாகனங்கள் மற்றும் வியாபாரிகளிடம் இராணுவத்தினர் கப்பம்கேட்டு துன்புறுத்தி வருகின்றனர்.மேற்படி சோதனைச்சாவடி ஊடாகச் செல்லும் பார

(12ஆம் பக்கம் பார்க்க)

## லயனல் பலகல்ல ஓய்வுபெற்றார் கொட்டேகொட இன்று பதவியேற்பு

( கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் பதினாறாவது இராணுவத் தளபதியாகப் பதவி வகித்து வந்த லெப்டினனட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்றுத் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதை அடுத்து மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட லெப்டினனட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்று சிறிலங்காவின் பதினேழாவது இராணுவத் தளபதியாக இன்று தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

ஓய்வு பெறும் லயனல்பலகல்ல 1965ஆம் ஆண்டு கடல் அதிகாரியாக இராணுவத்தில் இணைந்து அறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில் குளத்திலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்.ஊர்காவற்துறையில் உள்ள கிராஞ்சிக் குளத்தினுள் இருந்து வயோதிபர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.


அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிசாரால் மீட்கப்பட்ட சடலம் ஊர்காவற்துறை தம்பாட்டிப் பகுதியைச் சேர்ந்த குமாரவேல்(வயது 72) என்பவருடையது என இனம் காணப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மேற்படி குளத்திற்கு மீன் பிடிக்கச்சென்ற இரஸ்தாபநபர் காணாமல் போயிருந்ததாகவும், நேற்று இவர் குளத்தினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் பிரேதப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (33)

## கரும்புலிகள் திருவுருவப்பட ஊர்தி முல்லை.மாவட்டமெங்கும் பவனி

(புதுக்குடியிருப்பு)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கரும்புலிகளின் திருவுருவப்படங்களை தாங்கிய ஊர்தி மக்களின் அஞ்சலிக்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களுக்கும் பவனியாக வரவுள்ளது.

இன்று காலை 8.45 மணியளவில் மூங்கிலாறு மட்டு அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்திலிருந்து புறப்படும் இவ்வூர்தி உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு ஊடாக மாத்தளன்,பொக்கணை முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு சென்றடைந்து நாளைய தினம் அங்கிருந்து புறப்பட்டு செம்மலை ஊடாக குமுழமுனை, முள்ளியவளை ஆகிய பிரதேசங்களை சென்றடையும். பின் நாளை மறுதினம் கூழாமுறிப்பு, ஒட்டுசுட்டான், பேராறு சென்று மாங்குளத்தில் த்ரித்து நின்று 04.07.2004 ஆம் நாள் வன்னி விளாங்குளம் ஊடாக துணுக்காய், பாண்டியன் குளம் ஆகிய புகுதிகளுக்கு சென்று 05.07.2004 ஆம் நாள் மாங்குளத்தில் நடைபெறவுள்ள கரும்புலிகள் நாள் நிகழ்வு ஊர்வலத்திலும் கலந்து கொள்ளும். (08)



## வரிவிளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம்

சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டுவதற்கும், சிறந்தமுறையில் தயாரான சாதாரண பற்களைக் கட்டுவதற்கும், மிதப்புப் பற்களுக்கு சிறந்தமுறையில் கிளிப்போடுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் வேந்தன் பல்கட்டும் நிலையம். மத்திய கல்லூரி மைதானம் முன்பாக ஏ-9 சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

(சி- 9873)


## குடிசை தீக்கிரை

(உடையார்கட்டு)

விசுவமடு-மாணிக்கபுரம் பகுதியில் குடிசை ஒன்று கடந்த செவ்வாயன்று பகல் 1.30 மணியளவில் தீக்கிரையானது. மாணிக்கபுரம் பகுதியைச் சேர்ந்த இராசமாணிக்கம் என்பவரது வீடே தீக்கிரையானது. இலுக்கினால் வேயப்பட்டிருந்த மேற்படி வீடும், உடமைகளும் முற்றாக தீயினால் நாசமானது. மேற்படி குடும்பம் அன்றாடம் உழைத்து வாழ்க்கையை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (19)

# யாழ். மண்டைதீவில் படையினர் நிலைகொண்டுள்ள

# வீடுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## யாழ். அரச அதிபரிடம் கஜேந்திரன் பா.உ. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள மண்டைதீவில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வீடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனால் யாழ். அரச அதி பரிடம் கேட்டுள்ளார்.

யாழ். தீவக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். அரசஅதிபர் செ. பத்மநாதனைச் சந்தித்து கலந்துரையாடியபோதே பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் இதனை வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

மண்டைத்தீவுப் பிரதேசத்தில் பொதுமக்களின் வீடுகளை படையினர் ஆக்கிரமித்து வைத்திருப்பதால் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள வீடுகளைச் சேர்ந்த மக்கள் அகதி முகாம்களிலும், தற்காலிக வாழ்விடங்களிலும் அடிப்படை வசதிகள் அற்ற அவல வாழ்வினை வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் சோதனைக் கெடிபிடி கள், பாதுகாப்பு வலய நடை முறைகள் பாஸ் நடைமுறைகள் என்பன மக்களது இயல்பு வாழ்விற்கும் பெரும் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாக இச்சந்திப்பின்போது சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் இவை நீக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (33)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ்.மருத்துவமனையில் சிரமதானம்

## நடைபாதை வியாபாரிகள் சங்கம் மேற்கொண்டது

கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று நடைபாதை வியாபாரிகள் சங்கத்தினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

யாழ். நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், மற்றும் வியாபாரிகள் சங்கத் தலைவர் தயா உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (36)

# காணாமற்போன மீனவர் கரைவந்து சேர்ந்தனர்

(புதுக்குடியிருப்பு)

கடந்த 26 ஆம் திகதி அளம்பில் பகுதியிலிருந்து கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் சென்று காணாமற்போன இரு மீனவர்களும் கரைசேர்ந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அளம்பிலில் வசிக்கும் உடப்பைச் சேர்ந்த நல்லமுத்து கருணாநிதி, மயிலிட்டியைச் சேர்ந்த சந்திரமோகன் பார்த்தீபன் ஆகிய இருவருமே காணாமல் போய் மீண்டும் கரை சேர்ந்தவர்களாவர்.

வெளி இணைப்பு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவர்களுக்கு இந்நிலை ஏற்பட்டதாக மீனவர்கள்கூறுகின்றனர் (08)

## பாண்ட்வாத்தியக்குழு அரங்கேற்றம்

கிளிநொச்சி மத்திய கல்லூரி பாண்ட் வாத்தியக்குழு அரங்கேற்றம் இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் வீ.இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் பொதுச் சத்திரசிகிச்சை

(அலுவலகச்செய்தியாளர்)

பொது சத்திர சிகிச்சையும் அது சம்பந்தப்பட்ட நோய்களுக்கான ஆலோசனைகளும் எதிர்வரும் 03.07.2004 அன்று காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

யாழ். போதனாவைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் அவர்களினால் மேற்படி சத்திர சிகிச்சைகளும், நோய்களிற்கான ஆலோசனைகளும் வழங்கப்பெறவுள்ளது.

பயன்பெறவிரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.

(சோ)

# சாரணிய மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம்

(உடையார்கட்டு)

பாசறை செய்து முடித்த 2003 உடையார்கட்டு மகா வித்தியாலய சாரணிய மாணவர்களுக்கான சின்னம் வழங்கும் வைபவம் முல்லை. உடையார்கட்டு மாகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முல்லை. உடையார்கட்டு மகாவித்தியாலய சாரணியப் பொறுப்பாசிரியர் ரகு உதயகுமார் தலைமை ஏற்றிருந்தார்.

நிகழ்விற்கான ஆசியுரையை பாடசாலைப் பிரதி அதிபர் செல்வி பேரின்பராணி வழங்கியதை அடுத்து முல்லை. மாவட்ட சாரணிய உதவி ஆணையாளரின் உரையுடன் மாணவ, மாணவியர் சின்னங்கள் சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (19)


# வேலைவாய்ப்புக்கான பயிற்சிநெறி

2ம் பிரிவுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

☞ பரீட்சை எழுதிவிட்டுச் சும்மா இருக்கிறீர்களா?

☞ தகுதிக்கேற்ற வேலையைத் தேடிக்கொள்ள அரிய சந்தர்ப்பம்...!

குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற!!

நேரடி ஒலிபரப்பாளர் ஊடகவியலாளர் பயிற்சிநெறிகள்!!

பயிற்காலம் மூன்றுமாதம்

பதிவுக்கான முடிவுத்திகதி 30-07-2004

ஜோ-எகட்டனால் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சி நெறி

பயிற்சி வழங்குபவர்கள்

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்

மிகப் பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள்.

பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000 மட்டுமே

பதிவுக் கட்டணம் ரூபா 1000/= மட்டும்

ஆரம்பம் ஆகஸ்ட் முதல்வாரம்

தமிழ்மொழித் திறமைச் சித்தியுடன் க.பொ.த(சா) தரம் சித்தி ஆங்கிலம் தவிர்க்கப்பட்டுள்ளது.

பதிவுக்கட்டணத்தை நேரில் செலுத்திப் பதிவை மேற்கொள்ளலாம்.

தொடர்புக்கு: செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். தொ.பேசி:021-2227227

காரியாலய நேரம் காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை (சி:10110)


# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஒன்று கூடல்

(கிளிநொச்சி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. நிதித்துறை மனிதவள மேம்பாட்டு பகுதி மண்டபத்தில் மாலை 3.45 மணியளவில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் வன்னிப் பிராந்திய ஆணையாளர் வே. சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் படைப்பிரிவின் திட்ட இணைப்பாளர் சி. விபுலேந்திரன் ஜேர்மன் நாட்டின் அரச சார்பற்ற நிறுவனமான ஏ.எஸ்.பி நிறுவன வன்னிக்கான பிரதிநிதி ஜேம்ஸ் மார்டின் மற்றும் படையணி உறுப்பினர், மனிதவள மேம்பாட்டுப் பகுதி பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கடந்த 18,19,20,ஆம் திகதிகளில் நடைபெற்ற "சமூக நலப் பயிற்சி நெறி" தொடர்பான ஆலோசனைகளும், படைப்பிரிவால் எதிர்காலத்தில் முன்னெடுத்து செல்லப்படுகின்ற நடவடிக்கை பற்றிய தீர்மானங்களும் இந்நிகழ்வில் ஆராயப்பட்டது. (15)


# பிற்போடப்பட்டுள்ளது

ஆனி 18ஆம் திகதி 2004.07.02இல் நடைபெற இருந்த பொன்னாவெளி கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஆனி 30ஆம் திகதி 2004.07.14க்குப் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன்.

தகவல்
அ.குகதாசன்.

(4761)



மாந்தை கிழக்கு பிரதேச சபையில் ஏற்பட்டிருக்கும் சுகாதார தொழிலாளி வெற்றிடத்தை பதிவீட்டு அடிப்படையில் நிரப்புவதற்கான

# விண்ணப்பம் கோரல்

கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடையவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. அ. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. மாந்தை கிழக்கு பிரதேச எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருந்தல் வேண்டும்.

இ. 20.07.2004 இல் 18 வயதிற்கு குறையாதவரும், 45 வயதிற்கு மேற்படாதவருமாக இருத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்பிக்கும் பதவி தொடர்பாக, துறைசார்ந்த அனுபவமும், அறிவு ஆகியன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

உ. விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கத்தோடும், தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஊ கல்வித்தகைமைகள், ஆகக்குறைந்தது 5ஆம் தர சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், சுயவிபரங்கள் கொண்டதாக, தயாரிக்கப்பட்டு, "விசேட ஆணையாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்" எனும் முகவரிக்கு 20.07.2004இல். அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்விற்கான திகதி தகுதியானவர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்படும்.

திருமதி.சா.சிறிஸ்கந்தராசா,
விசேட ஆணையாளர்,
மாந்தை கிழக்கு பிரதேச சபை,
பாண்டியன்குளம்.

(சி-9874)

# நேட்டோ உச்சி மாநாட்டை ஆட்சேபித்து

# துருக்கியில் 2ஆவது நாளாகப் போராட்டம்

## –யுத்த நிறுத்தத்தைக் கைவிட தீவிரவாதிகள் எச்சரிக்கை

(அங்காரா)

**துருக்கியில் நேட்டோ நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்று வரும் நிலையில் துருக்கியின் குர்திஷ் தீவிரவாதிகள் ஆறு வருட கால யுத்த நிறுத்தத்தைக் கைவிடப்போவதாக எச்சரித்துள்ளனர். அத்துடன் நேட்டோ மாநாட்டுக்கெதிராக தலைநகரில் கடும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.**

துருக்கியின் வடபகுதியிலுள்ள மலைப் பிரதேசத்தில் துருக்கி கிளர்ச்சிவாதிகள் தமது ஆறுவருட கால ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரப் போவதாக அறிவித்துள்ளனர். துருக்கிக் கிளர்ச்சியாளர்கள் விடுத்துள்ள எச்சரிக்கையில் முதலீடு செய்பவர்களும், சுற்றுலாப் பயணிகளும் தமது நாட்டினுள் வரக்கூடாது என்றும் எச்சரித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க துருக்கியில் நேட்டோ மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டமும், ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன. இதில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அமெரிக்க நட்புறவு நாடுகளின் கூட்டமைப்பான நேட்டோ மாநாடு துருக்கியில் நடைபெற்று வருகின்றது. இந்த மாநாட்டிற்கு துருக்கியில் பரவலாக எதிர்ப்பலைகள் ஆரம்பத்திலேயே கிளம்பியிருந்தன. நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் வன்முறைகளும் தலைதூக்கியது. இதனால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். அதுமட்டுமன்றி பொலிசார் மீது கற்களை வீசியுமுள்ளனர். ஊர்வலமாகச் செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிசார் தடுத்தனர். இதனால் பொலிசாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்பு, அடிதடி ஏற்பட்டது. பொலிசார் பலரைக் கைது செய்துமுள்ளனர். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். 15 வருடகாலமாக துருக்கியின் குர்திஷ் தீவிரவாதிகளுக்கும் துருக்கிக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இரு தரப்பிலும் இறந்து போயுள்ளனர். இதனிடையே யுத்த நிறுத்தத்தை கைவிடப்போவதாக துருக்கிகிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்களை துருக்கி அரசு விடுதலை செய்துள்ளது.



துருக்கியின் தலைநகர் அங்காராவில் ஹில்டன் விடுதியில் நடைபெற்ற குண்டுவெடிப்பையடுத்து பதட்டமடைந்து காணப்படும் பொலிசாரும் பொதுமக்களும்.

## விவாதம்

(ஜகார்த்தா)

ஆசியன் அமைப்பிலுள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று இந்தோனேசியாவில் கூடினர். ஆசிய நாடுகளின் பாதுகாப்புப் பற்றியும், பயங்கரவாதம். பற்றியும் அவர்கள் விவாதித்துள்ளனா.




ஈராக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் தென் கொரியரான கிம்–சன்–இல் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சியோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திறகு அருகே சுலோகங்களை ஏற்படுத்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தென்கொரியர்கள். ஈராக்கிறகு மேலதிக துருப்புக்களை அனுப்பும் திட்டத்தைகைவிடுமாறும் ஏற்கனவே அங்கிருக்கும் துருப்புக்களை விலக்கிக்கொள்ளுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# உலங்குவானூர்தி விபத்து ஐ.நா.பணியாளர் பலர் பலி

கிழக்கு சியாராலியோனில் ஐ.நாவுக்கு சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் 24 பேர் மரணமடைந்துள்ளனர்.

கிழக்கு சியாராலியோன் எங்கமா எனும் நகரில் இந்த உலங்குவானூர்தி நேற்றுமுன்தினம் விழுந்து நொருங்கியுள்ளது. விபத்து நடந்த இடத்திற்கு அருகே பலரது உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த உலங்குவானூர்தி ஐ.நா.அமைதிகாக்கும் பணியாளர்களையும் ஏனைய ஊழியர்களையும் ஏற்றிக்கொண்டு சியாராலியோன் பயணமானது. விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லையென்று கூறப்பட்டுள்ளது.

# கலாமுக்கு துப்பாக்கி அனுப்பிவைப்பவரின் மனநிலையை பரிசோதிக்கப் பணிப்பு

(புதுடில்லி)

இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை அனுப்பியவரை மனநிலைச் சோதனைக்கு அனுப்ப டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பீகார் மாநிலம் பாட்னாவைச் சேர்ந்தவர் மகேஷ் சாவ். இவர் குடியரசுத் தலைவர் கலாமுக்கு கடந்த 22 ஆம் திகதி துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை பார்சலில் அனுப்பி வைத்தார். இதையடுத்து சாவ் கைது செய்யப்பட்டார். விசாரணையில் அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதை- அடுத்து அவர் மன நலம் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய மருத்துவமனைக்கு அனுப்பும் படி டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அது தொடர்பான அறிக்கையை ஜூலை 3 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஈராக்கின் இடைக்கால அரசினால் சதாம்மீதான விசாரணை ஆரம்பம்

ஈராக்கில் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் மீதான நீதி விசாரணைகள் இன்று ஈராக்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தகவலை ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்தின் பிரதமர் இயாத் சலாபி நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனுடன் சேர்ந்த 11 உயர்மட்ட அதிகாரிகள் மீதும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளது. இதேவேளை நேற்று சதாம் ஈராக் நீதிபதியொருவர் முன் ஆஜரானார்.

இன்று ஈராக்கிய நீதிபதிகளின் முன்பாக சதாம் ஹுசைனும் அவருடன் சேர்ந்த 11 உயர்மட்ட அதிகாரிகளும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

1988இல் குர்திஸ் இனத்தவர்களைப் படுகொலை செய்தமை, 1990இல் குவைத் ஆக்கிரமிப்பு, 1980,1988 இல் ஈரான் மீது போர் தொடுப்பு போன்ற குற்றச்சாட்டுக்கள் சதாம் ஹுசைன் மீது சுமத்தப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சதாம் ஹுசைன் உட்பட 11பேரும் ஈராக்கியப் புதிய இடைக்கால அரசிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் ஈராக்கியப் பொலிசார் சதாம் ஹுசைனை பாதுகாக்கக்கூடிய வகையில் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வரையும் அவர் அமெரிக்கக் கூட்டணிப் படைக்ளினது பாதுகாப்பில் இருப்பாரென்று கூட்டணிப்படைகள் கூறியுள்ளன.


67 வயதான சதாம் ஹுசைனின் சார்பாக அவரின் மனைவியின் ஏற்பாட்டில் 20 சட்டத்தரணிகள் கொண்ட குழு ஆஜராகவுள்ளது. இக் குழுவிற்கு பிரான்ஸின் பிரபல சட்டத்தரணி இம்மனுவால் லூடஸ் தலைமை தாங்குகின்றார்.

# எல்லையில் படைகளைக் குறைக்கும் நோக்கம் இந்தியாவிடம் கிடையாது

## பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

(புதுடில்லி)

பாகிஸ்தான் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படைகளைக் குறைக்கும் திட்டம் எதுவும் இந்திய அரசிடம் இல்லை. இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ஜம்மு காஷ்மீரில் பூஞ், ரயூரி உள்ளிட்ட இந்திய இராணுவ எல்லைப் பகுதிகளைப் பார்வையிட்டு பின்னர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.



இந்தியாவின் சிறிநகரில் பாதுகாப்பு நிலையமொன்றின் முட்கம்பி வேலியின் பின்புறமாக அதனைப் பார்த்தவாறு நடந்து செல்லும் காஷ்மீர் முஸ்லிம் பெண்மணி.

பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடருவது என்று இந்தியா உறுதிபூண்டுள்ளது. இதேவேளை பாகிஸ்தான் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படைகளைக் குறைக்கும் திட்டம் எதுவும் இந்தியாவிடம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கே எல்லைப்பகுதியில் இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் இராணுவ வீரர்கள் குறைக்கப் படவோ கூட்டப்படவோ இல்லை.

ஆனால் இந்தியாவுக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் காஷ்மீர் எல்லையில் காத்திருப்பதாக உளவுத் தகவல்கள் கூறுகின்றன என்று கூறிய அவர், மத்தியில் ஆட்சி மாறியுள்ளதே தவிர, பாதுகாப்பு விடயத்தில் மாற்றமில்லை என்றும் கூறியுள்ளார்.

# இடைக்கால அரசிற்கும் ஈராக்கில் நெருக்கழ!

(பாக்தாத்)

ஈராக்கில் பதவியேற்றுள்ள இடைக்கால அரசு பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மற்றொரு குண்டு வெடித்ததில் இரண்டு அமெரிக்கக் கடற்படையினர் உயிரிழந்துள்ளனர்.


அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிப்புச் செய்த பின்னர் இதுவரை 632 அமெரிக்கப்படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தென்பாக்தாத் "லரிபியா"வில் நேற்று முன்தினம் தாக்குதலுக்கு இலக்காகி எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய் தாங்கியை கடந்து செல்லும் ஈராக்கிய இளைஞன்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் தற்போது ஆசிரியராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. சிவபாலன் குணபாலன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

(சி.913ட)

## அந்தியேட்டி அழைப்பிதழ்



அன்புடையீர்!
நிகழும் தாரண வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் 02-06-2004 புதன்கிழமை சிவபதம் அடைந்த

### திருமதி பாலசுப்பிரமணியம் அன்னஜோதி (ஜானகி) அவர்களின்

அந்தியேட்டி நிகழ்வு 01-07-2004 வியாழக்கிழமை கீரிமலையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 02-07-2004 வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

'நன்றி'

ஜோதி இல்லம்
இல.17/5, சென்.ஆன்ஸ் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
திரு. நா. பாலசுப்பிரமணியம் – கணவன்
பா. பிரசாத் – மகன்.

(4623)

கிளி/ அரசியல்துறையின் ஆதரவுடன்
கிளி/ அழகியல் கலாமன்றத்தை இணைத்து

## தமிழீழ நுண்கலைக் கல்லூரி நடாத்தும்

## மாதாந்த முழுநிலாக் கலையரங்கு – ஆடி

காலம்: 02.07.2004 வெள்ளி 4.30
இடம் : கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபம்

### நிகழ்ச்சிகள்

**4.30** மங்கல விளக்கேற்றல், தேசியக் கொடியேற்றல், அக வணக்கம்.

**4.45** வயலின் ஷோலோ

| | |
|---|---|
| வயலின் | - இசைஞான திலகம் இசைமேதை இணுவையூர் திரு.உ.இராதாகிருஷ்ணன் |
| வயலின் | - இசைக் கலைமணி சு.கோபிதாஸ் |
| மிருதங்கம் | - இசைக் கலைமணி க.கன்னதாசன் |
| கெஞ்சிரா | - கலா வித்தகர் ச.நந்தகுமார் |
| கடம் | - கலா வித்தகர் க.மாதவன் |
| முகர்சிங் | - கலா வித்தகர் ந. சதீஷ்குமார் |

**6.00** சிறப்புரை திரு.ந. தமிழன்பன் அவர்கள்
(பணிப்பாளர் – புலிகளின் குரல் நிறுவனம்)

**6.30** "அறிமுகமும் உருமுகமும்" சிறப்பு நாடக அரங்கு புகழ் பூத்த நாடகக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் பிரபல பாரம்பரிய நாடகங்களின் தேர்ந்த பகுதிகளின் ஆற்றுகை.
அறிமுகம் செய்பவர் – தமிழ்க்கவி அம்மா அவர்கள்

**அறிமுகமும் உருமுகமும்**

முள்ளியவளை **என்.எஸ். மணியம்** குழுவினர்
புதுக்குடியிருப்பு – **திரு.செல்வராசா** குழுவினர்
சுழிபுரம் – **வை. சிவராஜா** குழுவினர்
இவர்களுடன் குமுளமுனை நெல்லிநாதன் அரியாலையூர் கோகுலன் ஆகியோர்.

**கலை விருந்தருந்த அனைவரும் வருக**
– நுண்கலைக் கல்லூரியினர்

(சி-9744)

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் சேவையில்

ஓர் புதிய உதயம்!

முள்ளியவளை மக்களின் நலன் கருதி
இம் மண்ணில் உதயமாகின்றது.

# கிராமிய அபிவிருத்தி வங்கி

காலம்:- 02.07.2004 வெள்ளிக்கிழமை
நேரம்:- நண்பகல் 12.00
இடம்:- பிரதான சாலை, முள்ளியவளை

## உங்கள்ஊரில் பணிசெய்ய வருகின்றோம்

## திரண்டு வருவீர்! ஆதரவு தருவீர்!

(சி.9745)

கிராமிய அபிவிருத்தி வங்கி முயற்சியாளர்களின் குடும்ப வங்கி

# கூட்டுறவுப் பணியாளர் நியமனங்களில் கணினி அறிவு இருப்பதும் அவசியம்

## –கூ. ச. தலைவர்களுக்கு சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பணியாளர்களைத் தெரிவுசெய்யும்போதும், நியமனம் செய்யும்போதும் அவர்களுக்குள்ள கணினி அறிவுபற்றி விசேடகவனம் செலுத்துவது அவசியம் எனச் சகல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.**

அரச மற்றும் தனியார் துறைகளில் அறிமுகம் செய்யப்பட்ட கணினிமயப்படுத்தலுக்கு ஈடு கொடுத்துக் கூட்டுறவுத் துறையையும் அபிவிருத்தி செய்யும் நோக்குடனும், கூட்டுறவுத் துறைகளில் ஏற்படும் கணக்கீட்டுத் தவறுகளால் ஏற்படும் தவறுகளைத் தவிர்க்கவுமே கூட்டுறவுப்பணியாளராகத் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு கணினி அறிவு இருத்தல் வேண்டும் என்றவிடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பான சுற்றுநிருபம் ஒன்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரால் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (33)

# கரும்புலிகள் நாளை சிறப்பிக்க வணிகர் சங்கம் ஏற்பாடு

(தென்மராட்சி)

புத்தூர் சந்தி வணிகர் சங்கம் கரும்புலிகள் நாளை சிறப்பாக அனுஷ்டிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வணிகர்சங்கக் கூட்டத்தில் இதுகுறித்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கொடிகாமம் பகுதி அரசியல் துறைப் பொறுப்பாளர் ரத்தினம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கரும்புலிகள் நாளை எவ்வகையில் அனுஷ்டிப்பதென ஆராயப்பட்டு அதற்கான நடவடிக்கைகளுக்கு ஒழுங்குபடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. (28)

# வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 15 ச.ச.நிலையங்கள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பல சனசமூக நிலையங்கள் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இயங்காதிருப்பதாக அப்பகுதிக்கான பிரதேசசபை செயலாளர் திருமதி.பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். அந்தவகையில் மேற்படிப் பிரதேசத்தில் உள்ள 71 சனசமூக நிலையங்களில் 56 சனசமூக நிலையங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. ஏனைய 15 சனசமூக நிலையங்களும் போரின் பாதிப்புக்களாலும் வசதியீனங்களாலும் இயங்கமுடியாதுள்ளன. இதனால் இப்பிரதேசவாழ் மக்களின் சமூகமுன்னேற்ற நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# தகவல் தொழில்நுட்பப் பாடம்; அறிமுகப்படுத்த விண்ணப்பிக்குக!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடத்தை பாடசாலை மாணவர்களுக்குரிய பாடங்களில் ஒன்றாக இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடத்தினைத் தமது பாடசாலைகளிலும் அறிமுகம் செய்யவிரும்பிய பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் விண்ணப்பங்களைக்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விண்ணப்பங்கள் யாவும் அவ்வப் பாடசாலைகள் அமைந்துள்ள வலயக்கல்விப் பணிப்பாளருடாகக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## பஞ்சவர்ணம் சிறுவர் நாடகம்

(தென்மராட்சி)

மட்டுவில் கமலாசினி வித்தியாலய கலையரங்கில் குழந்தை சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ணம் சிறுவர் நாடகம் இன்று காலை 10.30 மணியளவில் காண்பிக்கப்படவுள்ளது. (28)

# குடாநாட்டில் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாழ்ந்து வரும் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு உதவிகளை சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும், இடப்பெயர்வுகளாலும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துவரும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் கற்பதற்கு ஆர்வமுள்ள போதும் வறுமைகாரணமாக தமது கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு உதவிகளை வழங்கி வருகின்றது.

இதன் ஒருஅங்கமாக சங்கானைப் பிரதேசத்தில் வாழும் வறிய மாணவர்களுக்கான சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் கற்றல் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது. (33)

# மண்கடத்தலில் ஈடுபடும் வாகனங்களால் ஆபத்து!

(தென்மராட்சி)

கனகம்புளியடிப்பகுதிகளில் மண்கடத்தலில் ஈடுபடும் லொறி மற்றும் வாகனங்களால் இப்பகுதிகளில் உள்ள சிறிய ஒழுங்கைகள் மரணபயத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. கனகம் புளியடிச் சந்தியில் புதிதாகக் காவல் நிலையம் அமைக்கப்பட்டதால் மண் கடத்தலில் ஈடுபடுவோர் இப்பகுதியில் சன நெருக்கடி நிறைந்த பொற்கொல்லர் வீதி, மெய்கண்டான் வீதி, தோப்புரோடு, அம்மன் கோயில் பின்சாலை போன்ற பகுதிகளை தங்கள் தொழில்களுக்குப் பயன்படுத்தி வருவதால் வேலிகள் பாதிக்கப்பட்டும் இரவு தொடர்ந்து செல்லும் வாகனங்களால் மக்கள் நிம்மதி இழந்தும் வருகின்றனர். இதனால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் சூழல்உருவாகியுள்ளது. (28)

# பாடசாலை வாசலில் ஆபத்தை உருவாக்கக் காத்திருக்கும் மின்கம்பம்

## -அகற்றுவதில் மின்சாரசபை அலட்சியம்

(தென்மராட்சி)

கொடிகாமம் இராமநாதன் மகாவித்தியாலய வாசலில் இருக்கின்ற மின்கம்பம் உடைந்து சாய்ந்து எந்த நேரமும் விழும்நிலை உருவாகி இருக்கிறது. இதை அகற்றக்கோரி, பாடசாலை நிர்வாகம் மூன்று தடவைகள் இலங்கை மின்சார சபையின் கவனத்திற்குக் கொண்டு சென்றும் இதுவரை இலங்கை மின்சாரசபை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் மெத்தனப்போக்கைக் கையாண்டு வருகிறது.

கடந்த வாரம் இப்பகுதிக்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர், கஜேந்திரகுமார் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க மின்சாரசபையைக் கோரியிருந்தார். இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை. இதனால் இப்பாடசாலையில் கற்கும் மாணவர்களின் உயிர்களுக்கு எந்தநேரமும் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. காற்றும் கடுமையாக வீசிவருவதால் மாணவர்களின் கல்வியை கவனத்தில் எடுத்து உடனே நடவடிக்கை எடுக்கும்படி இப்பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (28)

# திருமறைக் கலாமன்ற அரங்கில் மாபெரும் இசைநாடக அளிக்கை

யாழ்.திருமறைக்கலாமன்றம் நடத்தும் மாபெரும் இசைநாடக அளிக்கைகள் யாழ.திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை ஆரம்பமாகின்றது.

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசக் கலைஞர்களால் மேடையேற்றப்படும் சிறந்த இசை நாடகங்கள் நாளையும், நாளை மறுதினமும், எதிர்வரும் 4ஆம் திகதியும் தினமும் இரவு7.00மணிக்கு நடைபெறும்.

இரண்டாம் திகதி ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி ஆகிய இசைநாடகங்களும், மூன்றாம் திகதி பக்தநந்தனார், பூதத்தம்பி ஆகிய இசை நாடகங்களும் நான்காம் திகதி அரிச்சந்திரா-அயோத்திய காண்டம், காசி காண்டம், மயான காண்டம் ஆகிய நாடகங்களும் மேடையேற்றப்படவுள்ளன.

# சைகையை மீறி உந்துருளியை செலுத்திய இளைஞர் மீது பொலிசாரால் தாக்குதல்

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் இளைஞர் ஒருவர் சிறிலங்காப் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலைக்கு முன்னால் நடைபெற்ற இச்சம்பவத்தில் கொடிகாமம், தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (வயது20) குழந்தை என அழைக்கப்படும் வாலிபரே தாக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலைக்கு முன்னால் வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த பொலிசார் இவர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளை சைகை காட்டி நிறுத்திய போது நிற்காமல் சென்ற இவரை பெண் பொலிசார் தடுத்து நிறுத்தி மோட்டார் சைக்கிளின் திறப்பை எடுக்க முயற்சி செய்தபோது இவர் பெண் பொலிசாரின் கைகளை தட்டிவிட்டதால் ஆத்திரமடைந்த பொலிசார் இவரை கடுமையாகத் தாக்கி காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தால் காலை பாடசாலைக்கு வந்த மாணவர்களிடையேயும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (33)

# கிபீர் ரக யுத்த விமானம் கொள்வனவு

இஸ்ரேலிடம் இருந்து இரண்டு கிபீர் ரக யுத்த விமானங்களை சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விமானங்கள் அடுத்த மாதமளவிலேயே கொள்வனவு செய்வதற்கு சிறிலங்கா அரசு உத்தேசித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.சிறிலங்கா விமானப்படையின் யுத்த வலுவை அதிகரிக்கும் வகையில் கொள்வனவு செய்யப்படவுள்ள இவ்விமானங்கள் இரண்டும், இஸ்ரேலிய விமானப்படையினரால் முன்னர் பாவிக்கப்பட்ட விமானங்களெனவும் தெரியவருகிறது.

# போதைப் பொருள் குற்றச்சாட்டு; அரையாண்டில் 4800 பேர் கைது

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலப்பகுதியில் சிறிலங்காவின் போதைப் பொருள் வியாபாரிகளும் பாவனையாளர்களுமாக 4800ற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஹெரோயின்' வியாபாரிகளும் பாவனையாளர்களுமாக 2674 பேரும் 'கன்னபிஸ்' போதைப்பொருள் வியாபாரிகள் 2135 பேரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் இருபத்தி இரண்டு கிலோ கிராம் ஹெரோயினும்,1867 கிலோ கிராம் 'கன்னபிஸ்' போதைப் பொருளும் இதே காலப்பகுதியில் கைப்பற்றப்பட்டதாகவும் சிறிலங்கா பொலிசார் கூறியுள்ளனர்.

# பாராளுமன்றில் பெரும்பான்மை இல்லாவிடினும் மக்கள் ஆணையை நிறைவேற்றியே தீருவோம்

## –சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்றில் பெரும்பான்மைக்கு ஒன்றிரண்டு ஆசனங்கள் குறைந்தாலும் மக்கள் வழங்கியுள்ள பொறுப்புக்களில் சிறப்பாக செயற்பட்டு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது என கம்பளையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டத்தின்போது சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் அடிதடி நடத்துகிறார்கள் அதனால் பயனில்லை. கடந்த பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு தேர்தல் தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இரண்டுமுறை நான் ஆட்சி செய்வதற்கு மக்கள் வழங்கிய ஆணை பந்தடித்து விளையாடுவதற்கல்ல. பாராளுமன்றத்தில் எதனையும் செய்துகொள்ளட்டும். ஆட்சியைக் கவிழ்க்கச் சிலர் கோடிக்கணக்கில் செலவிடுகிறார்கள். யார் என்ன சொன்னாலும் மக்கள் அளித்த தீர்ப்புக்கேற்ப கடமையாற்றுவதே எனது பொறுப்பாகும்.

1971இல் சிங்களவரே சிங்களவரைக் கொன்றனர். வடக்கு, கிழக்கிலுள்ள இளைஞர்கள் வன்முறையை எம்மிடமே கற்றுக்கொண்டனர். அரசியல்தலைவர்களும் வணிகர்களும் இதற்குப் பதில்சொல்ல வேண்டும். இன்று பாராளுமன்றத்தில் பாமரர்களே இருக்கிறார்கள். அவர்களே அரசியலை வியாபாரமாக்குன்றனர். எது எப்படியாயினும் மக்களின் ஆணைக்கேற்ப நாம் நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

# ரூபாவின் பெறுமதியைவிட டொலருக்கு பெறுமதி அதிகமென்பதை சந்திரிகா அறிவார்

லக்ஸ்ம வில்-பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன

தமிழில்-அ.சக்திவேல்

சந்திரிகா இப்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முயற்சிக்கின்றார். அதாவது இந்த சமாதான முன்னெடுப்பின் நோக்கம் இலங்கைக்கு உதவிகள் வழங்கும் வெளிநாட்டவர்களின்



நன்மதிப்பினைப் பெற்று நிதி உதவிகளைப் பெறுவதே ஆகும். இந்தியாவில் சிலர் மீண்டும் விடுதலைப்புலி களுடன் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கினார்கள். அதை நன்கு சனாதிபதி உணர்ந்து கொண்டார். ஆனால் வெளிநாட்டு உதவி வழங்கும் நாடுகள் தமிழீழ விடுதலைப்புலி களின் தலைவர் பிரபாகரனுடன் மீண்டும் பேச்சு வார்த்தை களை ஆரம்பியுங்கள் என்று நெருக்கடி கொடுத்ததால் இந்தியாவின யோசனை களைப் பின்தள்ளி தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு முன் வந்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இடை நிறுத்திய இடத்திலிருந்தே பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். உலகத்தின் பணக்கார வர்க்க நாடுகளில் இருந்து சந்திரிகாவினால் பிரிந்து செல்ல முடியாது. முதலாளி வர்க்க நாடுகளிலிருந்து சந்திரிகா பிரிய வேண்டு மானால் பொது மக்கள் ஆதரவுடன் வீதிக ளில் இறங்கி பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும். ஆனால் முதலாளி வர்க்கத் தலைமைப்பீடத்திற்கு இதனை-நடத்த முடியாது. இடது சாரி தலைமைப்பீடங்க ளுக்கு இதைச் செய்ய முடியும் என்பதை சரித்திரசான்றுகள் நிருபித்திருக்கின்றன. இடதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தலைமைப்பீடம் வெளிநாட்டு ஆதிக்கங்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நேரடியாக விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்து கொள்ள முடியும் இதற்கு நோர்வே அனுசரணையோ, இந்தியாவின் அனுசரணையோ தேவைப்படாது. இந்நாட்டுமக்களின் ஆதரவைத்திரட்டி அந்த மக்களின் ஆணையோடு உலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து உலக இடதுசாரி இயக்கங்களின் உதவியுடன் தொழிலாளர் ஆட்சியை அமைப்பதற்கு இடதுசாரிக்கொள்கையுடைய ஒரு தலைமைப்பிடத்திற்கு தான் முடியும்.

சந்திரிகாவின் அரசும் அவரின் அடிவருடிகளும் கடந்த தேர்தல்களின் பொழுதும் அதற்கு முன்னதாகவும் இடதுசாரிகளாகிய எங்களை மிகவும் விமர்சனம் செய்தார்கள். சமாதானக் காகங்கள், நோர்வேக் காகங்கள் புலிகளின் சகோதரர்கள் என்றெல்லாம் எங்களைப் பார்த்து ஏளனம் செய்தார்கள். இவர்கள் முழு நாட்டிலும் இனவாதத்தைத் தூண்டினார்கள் தங்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு இனவாதத்தை தூண்டிவிட்டு இந்த நாட்டில் இடது சாரி இயக்கங்களை பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள். ஆனால் இப்பொழுது சந்திரிகா சமா தானக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லமுடியாது.

நோர்வே: உதவிகள் இவருக்கு இப்பொழுது கட்டாயமாகத் தேவைப்படு கிறது. ரூபா நோட்டுக்களை விட டொலர் நோட்டுகளுக்கு அதிகமதிப்புள்ளது என்று சந்திரிகாவிற்கு நன்றாகத் தெரியும். இந்தியாவின் கட்டளைக்கும் அடிபணிய முடியாது. கடைசியில் ரணிலின் சமாதான நடவடிக்கையைத் தவிர வேறு எதையும் பின்பற்ற முடியாது. ரணிலுக்கும் இவைகளைத் தான் கூறினோம் இப்பொழுது சந்திரிகாவுக்கும் இவைகளையே கூற விரும்புகிறோம்.

சந்திரிகா தனது கட்சியினுள் அங்கம் வகிக்கும் இனவாதிகளைச் சமாளிப்பது மிகவும் கடினமானது. தற்பொழுது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் அவர்களோடு சேர்ந்திருக்கும் இனவாதிகளைப் பின்தள்ள வேண்டும். இந்த இனப்பிரச்சினையை மையமாக வைத்து தற்பொழுது ஜாதிக ஹெல உறுமய இனவாதத்தைத் தூண்டி அதன் மூலம் நாட்டின் பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு தற்பொழுது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோல் ஜே.வி.பியும் இனவாதத்தைத் தூண்டிவிட்டு சந்திரிகாவின் சமாதான முன்னெடுப்புக்களைக் குழிதோண்டிப் புதைப்பதற்குத் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். வயலில் குடலை நெல் வரும் தருணத்தில் நாட்டுப் பன்றிக்கு மிக குதூகலமாக இருக்குமாம் அதை நன்றாக ருசித்துச் சாப்பிடுவதில்

அது இன்பம் காணும், ஆனால் அதில் இருந்து கீழே விழும் நெல்மணிகளைக் காட்டுக்கோழி விரும்பி சாப்பிடுவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும்.

அதை முன்பே ஜே.வி.பி செய்தது இனவாதத்தை நாட்டில் படரவிட்டது அது தற் பொழுது ஹெல உறுமயவின் இனவாதத்திற்கு மிக வலுவை ஊட்டிவிட்டது.

எல்லே குணவன்ச, விமல் வீரவன்ச போன்றவர்கள் இனவாதத்திற்கே முன்னுரிமை வழங்குகின்றனர். இவர்களை நம்பி வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழி லாள வர்க்கத்தினரை இரண்டாம் தரப்பா கவே தற்பொழுது கணிப்பீடு செய்துள் ளனர். கடந்த வாரத்தில் தொழிற்சங் கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரை யாடல் ஒன்றை பிரதமர் நடாத்தினார். இந்தக் 'கலந்துரையாடல்களுக்கு ஜே.வி.பி.யினர் கலந்துகொள்ளவில்லை.

இதிலிருந்து தொழிலாளர்களின் உரிமைகளிள் எவ்வளவு பற்று வைத்துள்ளார்கள் என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். தொழிலாளர்களுக்காக வீதிகளில் இறங்கி மறியல் போராட்டம் நடத்துவோம். அவர்களுக்காகச் சிறை செல்லவும் தயார் என மேடைகளின் வீர முழக்கம் செய்த லால்காந்த,சிறிபால,எல்லேகுணவன்ச தேரர் போன்றவர்கள் இப்பொழுது எங்கே இருக்கின்றார்கள்,

பிரதமருடனான கலந்துரையாடலில் நாட்டில் சமாதானம் ஏற்படாமல் தொழிலாள்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது எனப் பிரதமர் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் கூறியுள்ளார். இப்பொழுது விமல் வீரவன்ச அவ்களும் எல்லே குணவன்ச தேரோவும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு ஆதரவாகப் போராட்டங்களை நடத்துமாறு நாங்கள் சவால் விடுகின்றோம். அதை இப்பொழுது உங்களால் செய்ய முடியாது. அப்படி நீங்கள் போராட்டங்களை நடத்தினால் ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகாவும் நிச்சயமாக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பார்கள். அப்பொழுது உங்கள் போராட்டங்கள் யாவும் காற்றில் பறந்துவிடும் என்பதை நான் ஜே.வி.பி.யினருக்குக் கூற விரும்புகிறேன்.



இனவாதிகளுக்கு நாட்டை ஆள்வதற்கு கொடுக்க முடியாது. மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துங்கள் என்று ஐக்கிய தேசிய முன்னணிக்கு அனைவரும் ஒன்று திரண்டு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவார்கள். பொதுமக்களுக்கு உறுதி மொழிகளை வழங்கிய அரசாங்கம் இப்பொழுது செய்வதறியாமல் விழி பிதுங்கிய நிலையில் உள்ளது.

ரணில் அரசுக்கு சந்திரிகா சகல விதத்திலும் இடைஞ்சல்களை ஏற்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசை பதவி விலகு வதற்கு என்னநடவடிக்கைகள் எடுத்தாரோ அதைவிட சந்திரிகாவின் அரசாங்கத்திற்கு உண்டுபண்ணுவார்கள், இது தவிர்க்க முடியாது அப்பொழுது இந்தவாய் வீச்சுவீரர்கள் எங்கே என்பது மக்களுக்கு தெரியவரும்.

---

## வத்தளையில் ஹோட்டல் உரிமையாளர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு

(வத்தளை)

ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.

வத்தளையில் வசித்துவரும் என்.மொஹமட் என்ற இந்த நபர் பல ஹோட்டல்களுக்குச் சொந்தக்காரர் என்றும் நேற்று முன்தினம் வெளு நலயில் தனது ஹோட்டல் ஒன்றில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரண்டு நபர்கள் இவரை 38ரக பிஸ்ரலால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகவும் வத்தளைப் பொலிசார் கூறுகின்றனர்.துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.ம.சு.மு. இன் பாதயாத்திரையில் கலக்கவில்லை மல்வத்த தேரரிற்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஏற்பாடு செய்திருந்த பாதயாத்திரை ஒன்றில் பங்கேற்காத காரணத்தினால் தமது விகாரையில் அமைக்கப்படவிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான பௌத்த சமய வகுப்புக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியில் வெட்டு விழுந்துள்ளதாக மல்வத்த நாயக்க தேரர் சனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

அண்மையில் சனாதிபதி இத் தேரரை சந்திக்கச் சென்றிருந்த வேளை மேற்படி தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது; ஐ.ம.சு முன்னணி நடாத்திய பாதயாத்திரைக்கு சுகவீனம் காரணமாக தன்னால் பங்குபற்ற முடியாதிருந்ததாகவும் இதனை கவனத்தில் கொள்ளாது தனக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு மறுக்கப்பட் டுள்ளதாக தெரிவித்தார். இது எந்தக் காலப் பகுதியி லென சந்திரிகா வினவிய போது உங்களின் ஆட்சிக் காலத்திலேயே என்று கூறியுள்ளார்.

## சு.சேவை தொ.சங்கக் கூட்டணியிலிருந்து ஜே.வி.பி.விலகியுள்ளதாக அறிவிப்பு

### தொ.சங்கம் ஐ.தே.மு.இன் கரமாகச் செயற்படுவதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பி அகில இலங்கை சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டணியிலிருந்து நீங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டணி ஐ.தே முன்னணியின் ஒரு கரமாக விளங்குவதால் தனது கட்சி இந்த முடிவிற்கு வந்ததாக அதன் அமைப்பாளர் சமந்த கோறளே ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்கள் ஒரு சிலருக்கு அதிகரித்துள்ள சம்பள உயர்வை ஏனைய ஊழியருக்கும்வழங்குவதற்கு ஆளும்கட்சி இணங்கியிருக்கும்நிலையில் ஐ.ம.சு. முன்னணியைக் கஷ்ரத்தில் வீழ்த்த ஐ.தே.முன்னணியுடன் இணைந்து மேற்படிச் சங்கம் வேலை நிறுத்தப்போராட்டங்களை நடத்துவதாக கோறளே ஆராய்ச்சி குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் தொழிற்சங்கக் கூட்டணியின் ஏனைய அமைப்பாளர்களான சமன்ரத்ன பிரிய, ரவிகுமுதேஷ் ஆகியோர் அவர்களின் புகழை உயர்த்திக்கொள்வதாகவும் சுகாதார சேவை ஊழியர்களைப் பலியிடப் போகின்றரெனவும் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் தொழிற் சங்கக் கூட்டணியிலிருந்த 54 அமைப்புக்கள் விலகிச் சென்றுள்ள நிலையில் இப்போது கூட்டணிக்குள் 7 அமைப்புக்கள் மட்டுமே அங்கம் வகிக்கின்றன. இக் கூட்டணியும் ஐ.தே.முன்ன ணியினரது விருப்பு வெறுப்புகளுக்குள்ளாகி வருவதாகவும் தனித்துச் செயற்படாதிருப்பதாகவும் கோறள ஆராய்ச்சி தெரிவிக்கிறார்.

# கடற்புலிகள் பலம் பொருந்திய அமைப்பாக வளர முன்னின்று உழைத்தவர் தளபதி கங்கைஅமரன்

## - நினைவு நிகழ்வில் கேணல் சூசை புகழாரம்



(அலுவலக செய்தியாளர்)

"கடற்புலிகள் சிறிய குழந்தையாக இருந்து ஒருபெரும் பலம் பொருந்திய அமைப்பாக வளர்ந்து விஸ்வரூபம் எடுப்பதற்கு முன்நின்று உழைத்த ஒரு தனித்துவமிக்க தளபதி கங்கை அமரன் "இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை பூநகரி கிராஞ்சியில் அமைக்கப்பட்ட லெப். கேணல் கங்கை அமரன் நினைவு மண்டபத்திறப்பு விழாநிகழ்வில் கலந்து சிறப் புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கங்கை அமரன் அவர்கள் ஒரு சிறந்த கடலோடியும் வழிகாட்டியுமாவார் 1991 ஆம் ஆண்டு கடற் புலிகள் அணியாக மாற்றம் செய்யப்பட்ட தன் பின்னர் கங்கை அமரன் அவர்கள் தளபதியாக நியமிக்கப்பட்டார் அன்றிலிருந்து மிகவெற்றிகரமான தாக்குதல்களை கள முனையில் நேரடியாக நின்று வழிநடத்திய ஒரு சிறந்த தளபதி. நீரடி நீச்சலில் இவர் சிறந்து விளங்கினார் தலைவரினுடைய. சிந்த னைகளையெல்லாம் அவரின் வழிகாட்ட லிலே செய்து முடிக்க வேண்டும் என்ற அவா இவர் மனதில் இவருடன் கூடவே இருந்தது.

தமிழ் மக்கள் எந்த அடக்குமுறை சக்திகளுக்கும் அடிபணிந்து தலைகுனிந்து வாழக் கூடாது மாறாக தலைநிமிர்ந்து மார்பு தட்டி தமிழினம் நாம் என்று கூறவேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு முதல் யாழ்ப்பாணம் வரையும் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரையான தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழீழத்தின் விடுதலைக்காய் காலநேரம் பாராது உழைத்த ஒரு தனித்திறமை வாய்ந்த தளபதியாவார்.

கடற்புலிகளின் பலத்தை மேலும் உயர்வடையச் செய்யும் நோக்கில் தேசியத்தலைவரின் வேண்டுதலுக்கமைவாக 1994 ஆம் ஆண்டு ஆண், பெண் போராளிகளைக் கொண்ட ஒரு தொகுதி போராளிகளுக்கு நீரடி நீச்சல் பயிற்சியை வழங்கினார். இவரால் பயிற்றுவிக்கப்பட்ட இந் அணி கடலில் எதிரிக்கு மிகவும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

உலகிலேயே நீரடி நீச்சல் மூலம் சிறப்பான தாக்குதல்களை நடத்தியவர்கள் ஆண்கள் தான் என்ற வரலாற்று உண்மையை புரட்டும் வகையில் இவர் பெண்போராளிகளுக்கும் நீரடி நீச்சல் பயிற்சியை வழங்கி கடலிலே கடற்படைக்கு எதிரான தாக்குதல்களையும் நடத்தினார்.

அந்தவகையில் இவரால் பயிற்றுவிக்கப்பட்ட பெண்போராளிகளில் முதலாவதாக கப்டன் அங்கயற்கன்னி அவர்கள் காங்கேசன் துறை கடற்படைத்தளத்தில் நீரடி நீச்சலாக சென்று முதலாவது தாக்குதலை கடற்படை விநியோகப் கப்பலான "எ-516 "என்ற கப்பலைத் தகர்த்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இந்தத்தாக்குதலை நடத்தியதன் மூலம் ஒரு வரலாற்றுச் சாதனையை தமிழீழ கடற்பரப்பில் நிகழ்த்திக் காட்டினார். இதன் பின்னர் கடற்படையின் பெருந்தளமான திருகோணமலைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படை பீரங்கிக்கப்பல்குகளை கடல் நீருக்கு கீழாகச் சென்று தகர்க்கும் நீரடி நீச்சல் கரும்புலிகளை உருவாக்கி மேற்படி தளத்தில் பெரும் தாக்குதலை நடத்திஎதிரிக்கு அளவிடமுடியாத பெரும் இழப்புக்களை ஏற்படுத்தினார். அதுமட்டுமன்றி 1986ஆம் ஆண்டு சுலோயன், பிறின்ஸ்ஸி ஆகியோர் காரைநகர் கடற்படைத் தளத்தில் சென்று தாக்குதல் நடத்த தயாரான போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்களோ அதே தளத்திற்கு கடற்சிறுத்தைக் கரும்புலிகளை அனுப்பி தளத்தில் இருந்த கடற்கலங்களை தகர்த்தழித்தார். இதன் பின்னர் சிறிலங்காவினுடைய கொடிக்கப்பலான 'சாகரவர்த்தனா' கப்பலை 1994ஆம் ஆண்டு கற்பிட்டிக் கடற்பரப்பில் வைத்து லெப்.கேணல் நரேஸ் அவர்களுடன் இணைந்து அதனைத் தகர்ப்பதற் கான நீரடிநீச்சற் கரும்புலிகளைக் கப்பலுக்கு அருகில் நீரில் இறக்கிவிட்டு சாகரவர்த்தனாவை கடலில் மூழ்கச்செய்த சாதனையாளன் கங்கை அமரன்.

தளபதி கங்கை அமரன் நீரடிநீச்சல் மூலம் சாதித்த சாதனைகள் கணக்கில் அடங்காதவை. தமிழீழத்தின் எந்தப்பகுதிகளில் நீரடிநீச்சற் போராளிகளைக் கொண்டு தாக்குதல்கள் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் கங்கைஅமரன் அவர்களும் அவரிடம் பயிற்சிபெற்ற போராளிகளும் தான் நிற்பார்கள். இவரது சாதனைகள் எண்ணில் அடங்காதவை. எமது போராட்ட வரலாற்றில் இவரது சாதனைகள் அழியாத அத்தியாயமாக என்றும் இருக்கும்.

கடற்புலிகளின் கடல் நடவடிக்கைகளில் கங்கை அமரன் அவர்களுக்குப் பெரும் பங்கிருந்தது. காரைநகருக்கும் குறிகாட்டுவான் துறைக்கும் இடையில் கடற்படையின் படகை வழிமறித்து கடற்படையைக்கொன்று அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிய முதற்சாதனை வீரன்.

கடற்புலிகளின் தாக்குதலில் கிளாலியிலும், சுண்டிக்குளம் கடலில்,முல்லைத்தீவு கடலிலுமாக தகர்க்கப்பட்டு கடலினுள் அமிழ்ந்துபோன கடற்கலன்களிலிருந்த பீரங்கிகளை மூன்று, நான்கு நாட்களுக்கு மேலாகநீருக்குள் அமிழ்ந்து அவற்றை கழட்டிக்கொண்டு பத்திரமாகக் கரையை வந்தடைந்தார். இவரின் இத்தகைய செயற்பாடுகள் தான் கடற்புலிகளை பலமடையச்செய்தது. தமிழீழத்தின் கடற்படையாக கடற்புலிகள் பிரசன்னமாவதற்கு வழிகாட்டிய தனிப்பெருந்தளபதி கங்கை அமரன். இவரின் இறப்பு கடற்புலிகளை பொறுத்தவரை பாரிய இழப்பாகும். சாவுக்குள் வாழ்ந்த இந்தத்தளபதி இறுதியில் ஊடுருவித்தாக்கும் அணியின் தாக்குதலில் காவியமாகிவிட்டான். இதற்கு ஒப்பான தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டு கருணாவைச் சாட்டுவதற்கு இப்போது அரச படைகள் தயாராகிக் கொண்டிருக்கிறது.

தமிழர்களின் விடுதலைக்காக கடலில் கடற்புலிகளாகவும், கரும்புலிகளாகவும் சென்று தமது சதையையும் இரத்தத்தையும் பாய்ச்சியிருக்கிறோம். இதனால் இன்று நாம் கடலில் பலம் வாய்ந்த அமைப்பாக உருப் பெற்றிருக்கிறோம். சமாதான காலத்தில் கடலில் கடற்புலிகளாகவும், கரும்புலிகளாகவுமாக 30 போராளிகளை நாம் இழந்திருக்கிறோம்.

இன்று கடலில் கடற்புலிகளின் ஆதிக்கதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல நாடுகள் சிறிலங்கா அரசிற்கு நேரடியாகத் துணைபோகின்றன. எனினும் எமது போராளிகளினதும் மாவீரர்களினதும் தியாகங்களுக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும் முன்னால் எந்தச்சக்திகளாலும் எதனையும் செய்யமுடியாது ஏன்பதுதான் உண்மை என அவர் மேலும் தெரிவித்துள்ளார் . (லோ,தீ)

# திருகோணமலையை சமாதான நகராக்கி சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்த முயற்சி

## -புதுவை இரத்தினதுரை குற்றச்சாட்டு



" தமிழுக்காகப் போராடுகின்றோம், பதினெண்ணாயிரத்துக்கு அதிகமான மாவீரர்களைக் கொடுத்துள்ளோம். அம் மாவீரர்கள் வெறும் மண்மேட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்யவில்லை. ஆனால் நாம் தமிழுக்காக வாழ்கின்றோமா?" விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை குழந்தைகளுக்கு தூய தமிழ்ப் பெயரைச் சூட்டிய நிகழ்விற்கு தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

கனடாவில் இயங்கும் சிலம்பம் அமைப்பின் தாயகக்கிளை இந் நிகழ்வை திருகோணமலை சென். ஜோசப் மண்டபத்தில் கடந்த ஞாயிறுமாலை நடத்தியது.


திருகோணமலை தலைநகர் என்று வரித்துள்ளோம். தலைநகருக்கு சோதனைக்ள் வந்துள்ளன. திருமலையை சமாதான நகராக்கி சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. எமது முதுகுக்குப் பின்னாலே திருமலைக்கு குழிபறிக்கும் வேலை நடக்கின்றது. தமிழீழம் எப்படி அமையவேண்டும்? சிலம்பம் அமைப்பு அதன்தாயகம் நோக்கிய பயணத்திட்டத்தில் கனவு கண்டுள்ளது. நாம் எவருமே அத்திசை யில் பயணிக்கவில்லை.

நாகரிகத்தின் உச்சிக்குச் சென்று விளங்காத பெயர்களை எமது குழந்தைகளுக்குச் சூட்ட ஆரம்பித்துள்ளோம். இனத்தின் அடையாளத்தைத் துடைத்தெறியும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். அடையாளம் இல்லாத இனம், முகவரியில்லாத இனம், முகமே அழிந்துபோன இனமாக மாறிக் கொண்டிருக்கிறோம். மாற்றத்தை விரும்பாதவர்கள் அல்ல நாம். மாற்றம் சரியானதாக அமைய வேண்டும்; அவை பெருமைக் குரியதாகக் கருதப்படவேண்டும். தூய தமிழ்ப்பெயரைக் குழந்தைகளுக்குச் சூட்ட முடியாதுவிட்டால் தமிழாகிய பெயர்களையாவது சூட்டுங்கள்." என்றும் கவிஞர் புதுவைரத்தினதுரை வேண்டுகோள் விடுத்தார்.

# சிறுவர் நலத்திட்ட மீளாய்வுப் பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

சிறுவர்நலத்திட்ட மீளாய்வுப் பட்டறை நேற்று முன்தினம் கிளிநொச்சி வெண்புறா நிறுவனத்தில் நடைபெற்றது.சமூகப்பணி நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் சி.மலரவன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மீளாய்வுப் பட்டறையில்.யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் பணிபுரியும் சமூகப்பணியாளர்கள் கலந்து



கொண்டனர்.மேற்படி மாவட்டங்களில்மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்ட ஆய்வுகள் இப்பயிற்சிப்பட்டறையில் மேற்கொள்ளப்பெற்றது.இதில் அன்னை இல்ல உளவளத்துணை இணைப்பாளர் றெஜினோல்ட் அடிகளார் சிறுவர் நலத்திட்டநுகர்கடன் பொறுப்பாளர் எம்.ஜ... .வபாலன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# உலக வங்கியின் வீட்டுத்திட்டம் குறித்து சந்திப்பு

(அலுவலகசெய்தியாளர்)

உலகவங்கியின் ஏற்பாட்டில் முதன் முதலாக கிளிநொச்சி மாவட்டத்தில் 100வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக நேற்று முன்தினம் ஆனந்தபுரம் கிராமத்தில் 50 வீடுகள் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பெற்ற பயனாளிகளுடனான சந்திப்பு ஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில் சங்கத்தலைவர் மார்க்கண்டு தலைமையில்



நடைபெற்றது. கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், கிளி.மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன்,கரைச்சி பிரதேசச் செயலக திட்டப்பணிப்பாளர் திருமதி மீரா,கரைச்சி பிரதேச செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தர்,தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தைச்சேர்ந்த நல்லையா ஆனந்தநகர் கிராமசேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு வீடமைப்பு சம்பந்தமான கருத்துரைகளை பயனர்ளிகளுக்கு வழங்கினர்.ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா செலவில் தலா ஐம்பது பயனாளிகளுக்குவீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (சோ)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சுவாசநோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வன்னி மாவட்டத்திலுள்ள சுவாச நோயாளர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் மாதத்தில் முதலாவது புதன்கிழமையில் கிளிநொச்சி மாவட்டவைத்திய சாலையிலும், மூன்றாவது புதன் கிழமையில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையிலும் சுவாசநோயாளர்களுக்கான சிகிச் சைகள் இடம் பெறவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட மாகாண சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்..(சோ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

01.07.2004



**நயினையிலே**
**தேரேறி**
**நமக்கொரு**
**தீர்வு தர வேண்டும்**

போரை மண்ணில் நிறுத்திடவே தேரிலேறி வருக
புதிய வாழ்வை தந்திடவே தேரிலேறி வருக
சேரும் பகையை விலத்திடவே தேரிலேறி வருக
செல்வ வாழ்வை செழிக்க வைக்க தேரிலேறி வருக
கோரும் உரிமை கிடைத்திடவே தேரிலேறி வருக
கொள்கை காத்து உழைத்திடவே தேரிலேறி வருக
பாரில் மக்கள் நலனைக் காக்க தேரிலேறி வருக
பஞ்சம் நாட்டில் தீர்ந்து போக தேரிலேறி வருக
நீரும் துயரை நிறுத்திடவே தேரிலேறி வருக
நிரந்தர தீர்வைத் தந்திடவே தேரிலேறிவருக!

மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்

அலையெறியும் கடல்நடுவே அமர்ந்திருக்கும் நாயகியே!
தேரேறும் நன்நாளில் உமைவணங்குகின்றோம்!

இலங்கையின் எந்த பாகத்தில் இருந்தும்எந்தத் தொலைபேசியில் இருந்தும் 24 மணிநேரமும் மிகக்குறைந்த கட்டணத்தில்எமது நிறுவனத்தின் ஊடாக வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாடுகளுக்கான இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள்.

போட்டோக்கொப்பி, பக்ஸ், இன்ரநெட் மற்றும் ஈமெயில் வசதிகள்.

தொலைபேசி அட்டைகள்.

அருள் கொமினிகேசன்

இல. 01 பிறவுண் வீதி,
நாவலர் வீதிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

☎ 0212223536
0212223615

E.mail. arulcom 2003@ Yahoo.com

(சி:9941)

தேரேறிவரும்
நயினைநாகபூஷணி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்கள், புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள் O.H.P புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள் (வானியல்), நுணுக்குக் காட்டிகள், கணனி நூல்கள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் 212, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0212225542 (சி:9940)



இன்று தேரேறிவரும் நயினாதீவு
நாகபூஷணி அம்மன் அருள்
எல்லோருக்கும்கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

மணிஜயப்பா
நகைமாடம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி:9942)

தேரேறி அருள்பாலிக்கும் நயினாதீவு நாகபூஷணி அம்மன்
பாதாரங்களை பணிந்து நிற்கின்றோம்.

தில்லையம்பதி மோட்டோர்ஸ்





AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.

(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

GREAVES LIMITED
இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-222 2488, 021-2223820
(சி:9939)

இன்று தேரேறிவரும் நயினாதீவ நாகபூஷணி அம்மன் அருள்
எல்லோருக்கும்கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

SUMEE

SM கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர்
தங்க நகைகளை சுத்தமான
22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து
பெற்றுக்கொள்ளலாம்.





இல: 46A ,தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.
(சி:9938)

தேரேறிவரும் நயினைநாகபூஷணி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

இளம் நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை கைதேர்ந்த
நிபுணர்களின் கைவண்ணத்தில் அழகாகவும், சிறப்பாகவும் அசல்
22கரட்டில் செய்து கொள்ள நாடவேண்டிய இடம்
நம்பிக்கை, நாணயம், தரச்சிறப்பு




Sgh சிவா கோல்ட் ஹவுஸ்

இல:56, தர்மலிங்கம் வீதி, வவுனியா. Tel: 024-23034
(சி:9937)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய

# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

## 01.07.2004



இன்று காலை (01.07.2004) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்தத் தேர்த் திருவிழா இடம் பெறுகின்றது. 64 சக்தி பீடங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமாகும். இந்துப்பண்பாட்டுக்கு எதிரான மிலேச்சர்களால் எவ்விடர் வந்த போதும் அம்பாளின் ஆகம முறை யிலான பூசை வழி பாடுகள் திருப்பணிகள் முட்டின்றி நடந்து வரும் சத்தித் தலம் நயினை நாகம்மாளின் திருக்கோயிலாகும். இயற்கையாகவே நாற் புறமும் அலை யெறியுங் கடலாற்சூழப்பட்டு மிகவும் பழைமை வாய்ந்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டு இன்றும் சைவத் தமிழ் அடியார்களின் உள்ளத்திலே மிகவுயரிய மகோன்னத மகிமையுடன் போற்றி வழிபடப்படும் திருத்தலம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலாகும்.

இன்று உலகின் நாலாபுறங்களிலும் இருந்து அம்பாளைத் தரிசித்து தமது இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளும் அடியார்கள் வெகு அதிகளவிலான தொகையினர் ஆகும். இ:.தொன்றே அம்பாளின் பேரருளை அளவிடப் போது மான சான்றாகும். இக்கோவிலினதும் மூல மூர்த்தி, எழுந்தருளி மூர்த் திகள் பற்றிய பெருமைகளும், நாகதோஷம் தீர்க்கும் வரலாறும் இவ்வா லயத்தின் புகழையும், கீர்த்தியையும், மகிமையையும், மகத்துவத்தையும் துலக்க உதவுவனவாகும்.

இத் திருத்தலம் மணிமேகலாதெய்வத்துடனும், கௌதமபுத்தருடனும் தொடர்புடையதென்பதனை மணிமேகலையினூடாகவும், மகாவம்சத்தினூடாகவும் அறியமுடிகிறது. ஆதி வரலாற்றுச்சான்றுகளாக இன்றும் காணக் கூடியதாகவுள்ள பாம்பு சுற்றிக்கல், கருடன் கல் என்பனவும், முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்து கல்வெட்டும்,திருத் தேரிலேயுள்ள அம்பாள் ஆலய வரலாற்றைச் சித்திரிக்கும் புகழ்வாய்ந்த அழகிய சித்திரங்கள் ஆகியனவும் நாகபூஷணி அம்மனின் தனிப்பெரும் கீர்த்தியை துலக்க வல்லனவாகும். இயற்கை மூலிகையான வேப்பிலையின் மகத்துவத்தை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலேயே கண்கூடாகவே அனைவரும் அறியலாம். பல்வேறு பிணிகளையும் போக்கிச்சுகம் செய்யும் வல்லமையும் ஆற்றலும் ஸ்ரீ நாகபூஷணி என்னும் வேப்பிலை நாயகிக்கு உண்டு.

இன்றும் பெண்களின் உள்ளத்தில் அதியுயர் தெய்வமாகவும், நம்பிக்கைக்குரிய தாயாகவும் திகழ்கின்றாள். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருமணம், மகப்பேறு, உடற்சோர்வு, குடல் நோய்கள், தோல் நோய்கள், என்பவற்றினை நீக்கும் பேராற்றல் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலயத்திற்குண்டு. சிவராத்திரி, ஆடிப்பூரம், திருவெம்பாவை எனும் சமயவிரதநாட்களிலே அம்பிகையை பூசிக்கும் அடியார் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. இவற்றுக் கெல்லாம் காரணம் நாகம்மாளின் பெரும் கருணையே ஆகும். அருளாட்சியின் வீச்சு அதன் மகிமை எம்மால் எடுத்துரைக்க முடியாத வகையிலே வியாபித்து விரிந்து பரந்து ஆழ்ந்து அகன்று நிற்கிறது.

அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் கருணைஉள்ளம் படைத்த தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன். இலங்கையிலே வசிக்கும் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் இந்துக்கள் இன்னும் எத்தனையோ சமயப்பிரிவுகளைச் சேர்ந்த வர்கள் எவ்வித வேறு பாடுகளும், பேதங்களுமின்றி இங்கு வந்து அம் பாளைத் தரிசித்து, அன்னதானத்திற் பங்குகொண்டு வரங்கள் பல பெற்றுச் செல்கின்றனர். சர்வமத சந்நிதி எனத்திகழ்வது நயினாதீவு. எல்லாச் சமயங் களுக்கும் சமயவாதிகளுக்கும் இடந்தந்து பெரும் தத்துவமாய் வியாபித்துள்ள சைவ சித்தாந்தம் எனும் ஆணி வேரின் பலத்துடனும், ஆகமவழி பாட்டு மரபினையும், சைவநீதியி னையும் நிலைநிறுத்தும் நயினை நாகபூஷணியம்மனின் திருத்தேர்த் திருவிழா வைபவம் ராஜயோக போகவைபவமும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த தொன்றாகும்.

இன்றைய அம்பிகையின் திருத்தேர்ப் பவனியிலன்று நாம் அனைவரும் மனமொன்றிப் பிரார்த்திக்கத்தக்கது என்ன வென்றால் இந்த நாட்டிலே நிரந்தர மான சமாதான சகவாழ்வும் சாந்தியும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும் என்பதுடன், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது நிம்மதியான வாழ்வுக்கு அம்பாள் திரு வருள் சுரந்து வழிசமைக்க வேண்டும் என்பதேயாகும். சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் சீலமுற்று, நித்திய சாந்தியையும் அமைதியையும் திருவருள் சுரந்து நல்கிடம்மா! என்று பிரார்த்திப்போமாக!

சிறப்பிதழ் ஆக்கம்: காரையூரான்



தேரேறி அருள்பாலிக்கும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் பாதாரங்களை பணிந்து நிற்கின்றோம்.
கிளிநொச்சி நகரிலும்
மல்லாவி நகரிலும்
உங்களுக்கு தேவையான
அனைத்து புடைவை வகைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யாழ்சாலை, கிளிநொச்சி. (அமுதசுரபி முன்பாக)
(சி:9934)
யோகபுரம், மல்லாவி.


சந்ததி தழைக்க தரணி சிறக்க
தமிழும் சைவமும் தான் வளர
சிந்திய குருதியும் செய்தீ வினைகளும்
சிறிதும் தொடரா தகன்றுவிடப்
பந்தியில் சகலரும் சமத்துவம் பெற்றுப்
பாங்காய் வாழ்ந்து மகிழ்ந்திருக்க
நிந்திப்பவர்கள் தொல்லை களைத்து
நிம்மதி தந்து கத்திடுவாய்.
தரமானதும் சுவையானதுமான
உணவுவகைகளுக்கு
சும்மா இன்சுவையகம்
யாழ்சாலை, பரந்தன் சந்தி, கிளிநொச்சி.
முதன்மைச் சாலை, கிளிநொச்சி.
(சி:9935)


அலையெறியும் கடல்நடுவே அமர்ந்திருக்கும் நாயகியே!
தேரேறும் நன்நாளில் உமைவணங்குகின்றோம்!
விழியின் மீது விழிப்பாயிருங்கள்
சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகின்றீர்களா?
ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்களா
அப்படியாயின் நிச்சயம் கண்குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேடசலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவச கண்பரிசோதனைகளும்,
ஆலோசனைகளும் வழங்கப்படும்,
இன்றேவிஜயம் செய்யுங்கள்.
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222-2486
K.K.S. வீதி, கன்னாகம்.
91,K.K.S. வீதி, கொக்குவில்.
(சி:9936)


இன்று தேரேறிவரும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் அருள்
எல்லோருக்கும்கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.
- சுத்தமான பொதி செய்யப்பட்ட மளிகைப்பொருட்கள்
- பலவ்கையான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகள்
- இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், பழரசங்கள்
- ஆங்கில மருந்து வகைகள்
- அன்பளிப்பு, அழகுசாதன, வாசனைத் திரவியங்கள்
- அனைத்துப் பாடசாலைப்பொருட்கள்
- நவீன வடிவில் அமைந்த கண்கவர் தங்க நகைகள்


உங்கள் தினசரித் தேவைகளுக்கு

அன்னைநாகா பூட் சிற்றி
Annai Nagaa Food City
இல:175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 021-2225515 தொ. நகல்: 021-2225223


தேரேறி அருள்பாலிக்கும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் பாதாரங்களை பணிந்து நிற்கின்றோம்.
Sanshigaa
JEWEL HOUSE
சன்சிகா நகையகம்
சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
114, BAZAAR STREET, VAVUNIYA
TEL: 024-2224028
யாழ் கணேசா நகையகம்
124,செட்டியார் தெரு,கொழும்பு -11
(சி:9933)



# யூரோ-2004 கால்பந்துக் கோப்பையை செக்.குடியரசு வெல்லும் - ராகுல் ராவிட்

போர்த்துக்கலில் நடைபெற்று வரும் 2004 ஐரோப்பிய கால்பந்து சம்பியன் போட்டியில் செக்.குடியரசு அணி வெற்றிபெற்று கோப்பையைக் கைப்பற்றும் என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் துணை கப்டன் ராகுல் ராவிட் கூறியுள்ளார். புதுடில்லியில் ஹட்ச் நிறுவனத்தின் விளம்பர நிகழ்ச்சிக்காக செவ்வாய்க்கிழமை அங்குசென்ற ராவிட் மேலும் கூறியதாவது; ஐரோப்பிய கால்பந்து போட்டியில் செக். குடியரசு அணிக்கே எனது ஆதரவு ஏனெனில் தொடக்கம் முதல் அவர்களே சிறந்த முறையில் ஆடி வருகின்றனர். இப்போட்டியின் வலுக்குறைந்த அணியாக கருதப்பட்ட அந்த அணியினர் தொடர்ந்து முன்னேறி வருவது மிகவும் பாராட்டுக்குரியது எனத் தெரிவித்த ராவிட் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா நம்பிக்கையுடன் விளையாடும். இருப்பினும இதை அறிவுக்கு ஒவ்வாத மிதமிஞ்சிய நம் பிக்கையாக கூற முடியாது என்றார்.



நான்கு ஆண்டு இடைவேளைக்கு பிறகு ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி ஜுலை 16 ஆம் திகதி தொடங்கவுள்ளது. வலுவான பாகிஸ்தான், இலங்கை அணிகளுடன் இந்தியா இப்போட்டியில் களமிறங்கவுள்ளது. உள் நாட்டுப் போட்டிகளில் இலங்கை மிக பலம் பொருந்திய அணியாக விளங்கும். இருப்பினும் சமாளித்து ஆடுவோம் என்றார் ராவிட்.

# சுவீடன் அணியின் பிரபல கால்பந்து வீரர் ஹென்றி கிளாசன் பார்சிலோனாவுக்கு ஒப்பந்தம்



சுவீடன் நாட்டின் பிரபல கால்பந்தாட்ட வீரர் ஹென்றிகிளாசன் ஸ்பெயினின் பார்சிலோனா கழகத்தில் விளையாடுவதற்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இதற்கான மருத்துவ பரிசோதனையிலும் அவர் தேறியுள்ளதை அடுத்து பார்சிலோனா கழகத்தில் விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2002 உலக்கிண்ணப் போட்டிகளை அடுத்து ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட ஹென்றி கிளாசன் சுவீடன் மக்களின் ஓயாத வேண்டுகோளை அடுத்து யூரோ-2004 போட்டியில் மீண்டும் விளையாடியிருந்தார்.

இதன் போது அவர் அபாரமாகத் திறமையை வெளிப்படுத்தியதுடன் பல்கேரிய அணிக்கு எதிரான போட்டியில் இரண்டு கோல்களையும் அடித்தார்.

இதற்கு முன்னர் பெல்டி கழகத்திற்காக ஏழு ஆண்டுகாலம் விளையாடி வந்த கிளாசன் அடுத்து ஒரு வருடகாலத்திற்கு பார்சிலோனா கழகத்துக்கு விளையாடவுள்ளார்.

# பிரேசில் கால்பந்து அணிகலந்து கொள்ளும் வினோதமான கால்பந்துப் போட்டி கெய்ட்டியில்

உலகில் புகழ் பெற்ற பிரேசில் கால்பந்தாட்ட அணி இதுவரை மேற்கொள்ளாத புதிய பாணியை முன்னெடுக்கவுள்ளது.

கெயிட்டியில் மோதலில் ஈடுபட்டுள்ள குழுவினரின் ஆயுதங்களைக் களையும் முயற்சியிலேயே பிரேசில் அணி ஈடுபடவுள்ளது.

ரொனால்டோ,ரொனால்டினோ போன்ற பிரபலங்களை உள்ளடக்கிய பிரேசில்அணி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கெயிட்டி தேசிய அணிக்கு எதிராகக் கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் பங்கேற்கவுள்ளது.

இந்தப் போட்டியில் அனுமதிக் கட்டணத்துக்குப் பதிலாக ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

கெயிட்டியில் பணியில் ஈடுபட்டுள்ள பிரேசில் நாட்டு ஐ.நா அமைதி காக்கும் படையின் மோதலில் ஈடுபடும் தரப்பினரிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்காகவே இந்த அரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.


## -விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ்-

# அமெரிக்க.ரஷ்ய வீராங்கனைகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினர்

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர்பிரிவு ஆட்டங்களில் ரஷ்யாவின் மரியா காட்டோவா அமெரிக்காவின் லின்சே டெவ'ன் போட் ஆகியோர் அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் தற்போது பரபரப்பான காலி றுதிப்போட்டியை எட்டியுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் பிரிவு நான்காம் சுற்று ஆட்டத்தில் நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம் பிரான்சின் ரட்டியானா கோலோ வின்னை 6-2, 6 -1 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். இதே போல் அமெரிக்காவின் ஜெனிபர் ஹெப்ரியாட்டி ரஷ்யாவின் பெற்றோவாவை வெற்றிபெற்றார்.



இந் நிலையில் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர்பயஸ் அமெரிக்காவின் மார்ட்டினா ஜோடி மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றது.

# இந்தியா,அவுஸ்திரேலியா,இங்கிலாந்து போன்று ஒப்பந்த அடிப்படையில் வீரர்களைத் தெரிவு செய்ய வேண்டும்

## -இன்சமாம் உல்-ஹக்


அவுஸ்திரேலியா, இங்கிலாந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை போன்று ஒப்பந்த அடிப்படையில் வீரர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையை அந்நாட்டு கிரிக்கெட் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினர் தங்கள் அணிக்கான வீரர்களைத் தரம் பிரித்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கின்றனர்.

இந்த முறையைப் பின்பற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினரும் முடிவு செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந் நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாடும் வீரர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும் என்று இன்சமாம் உல்-ஹக் கூறியுள்ளார்.

மற்ற நாடுகளின் உள்ளூர் அணிகள் மோதும் போட்டிகளுக்கு வீரர்கள் அடிக்கடி செல்வதைத் தடுக்க ஒப்பந்த முறை உதவும் என அவர் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியா மற்றும் இந்தியாவுடன் பாகிஸ்தான் அணியை ஒப்பிட்டு விமர்சிப்பவர்கள் அந்த நாடுகள் அமுல் படுத்தும் ஒப்பந்த முறையை மட்டும் பின்பற்றத் தயங்குவது ஏன் என்றும் இன்சமாம் உல்-ஹக் வினாவினார்.






# முறியடிக்கப்படாத சாதனையை நிலைநாட்டும் வரை போட்டிகளில் தொடர்வேன்-முத்தையா முரளிதரன்

தனக்கு விடுக்கப்படட்டு வரும் சவால்களுக்கு மத்தியில் மிகுந்த மனோதிடத்துடன் இருப்பதாகவும்,1000 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்துவதே தனது அடுத்த இலக்கு என்று நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மிகவும் தூய்மையான முறையில் பந்து வீசியே தான் உலக சாதனையை எட்டியாதாகத் தெரிவித்த அவர், தான் ஒரு போதும் பந்தை வீசி எறியவில்லை எனவும் இலங்கை போன்ற ஓர்சிறிய நாட்டில் இவ்வாறான ஒரு சாதனை நிலை நாட்டப்படுவதை ஐரோப்பிய நாடுகள் விரும்பாமையே தன் மீது பழி சுமத்தக் காரணம் என்றும் முரளி தெரிவித்தார்.



அடுத்த உலகக்கிண்ணப் போட்டியுடன் தான் ஓய்வு பெற எண்ணியிருந்த போதும் தற்போது தனக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து முறியடிக்கப்படாத சாதனையை நிலை நாட்டும் வரை தொடர்ந்தும் விளையாடப்போவதாகவும் தெரிவித்தார்.

# சினேகபூர்வ போட்டிகளில் கலந்துகொள்ள சிம்பாப்வே அதிருப்தி வீரர்கள் இங்கிலாந்து செல்வர்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் சர்ச்சைக்குள்ளான 15 வீரர்களில் ஹீத்ஸ்ரிக் உட்பட சிலர் இணைந்த சிம்பாப்வே வீரர்கள் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கின்றனர். உத்தியோகப் பற்றற்ற சினேக பூர்வ ஆட்டங்களில் இங்கிலாந்து கழகங்களுடன் இவர்கள் விளையாடுவர்.

சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அந்தஸ்த்து தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. இந்தச் சுற்றுலாவுக்கான நிதியைப் பெற அவர்கள் வசூலில் ஈடுபட்டுள்ளதாகவும், சர்ச்சைக்குள்ளானவர்களில் சிலர் தேசிய அணியில் பங்கேற்கும் வாய்ப்பு சாடையாகத் தென்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இவர்களில் ஷேன் எர்வின் அவுஸ்திரேலியாவில் இருப்பதால் இப்பயணத்தில் சேரமாட்டார். அதே போல தஸ்மேனியா அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்துள்ள அன்டி பிலிங்னட்டும் இக்குழுவில் இணைவது சந்தேகமே. போட்டிகள் வரும் ஜுலை 14ஆம், 16ஆம் திகதிகளில் விம்பிள்டனில் நடைபெறும்.

# சிறிலங்கா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

சிறிலங்கா - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டி இன்று அவுஸ்திரேலியாவின் டார்வினில் ஆரம்பமாகின்றது.

இந்தப் போட்டியில் சிறிலங்காவின் இளம் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


லசித் மாலிங்க

20 வயதான லசித் மாலிங்க முடிவடைந்த பயிற்சிப் போட்டியில் சிறப்பாகப் பந்து வீசி ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றித் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜெக் தொம்சனின் பாணியில் பந்து வீசும் மாலிங்க சிறிலங்காவில் உள்ள அதிவேகப் பந்து வீச்சாளராவார்.


சிறிலங்கா அணி ஏழு துடுப்பாட்ட வீரர்களுடன் இன்றைய போட்டியில் விளையாடும் என அணித் தலைவர் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் விளையாடும் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் முரளிதரனின் சாதனையை முறியடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




நெதர்லாந்து, போர்த்துக்கல் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது

## சிந்தனைக்கு



பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது, எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-07-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham 23ela@yahoo.com


## யதார்த்தத்தை அறிய முன்வரவேண்டும்

"இராணுவம் கருணாவிற்கு உதவுகின்றது என்ற குற்றச்சாட்டை விடுதலைப்புலிகளால் நிருபிக்க முடியவில்லை. இதனால் குற்றச் சாட்டை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆகையினால் விடுதலைப்புலிகள் தமது மனத்தை மாற்றிக்கொள்வார்கள் என எண்ணுகின்றேன" என்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன்புறூவ் ஹொவ்டேயின் கூற்றுக்கள் சரியானதொரு மதிப்பீடற்றதாகும்.

விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டைத் தங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என்பதற்காக விடுதலைப்புலிகள் தங்கள் குற்றச் சாட்டைக் கைவிடவோ, விலக்கிக்கொள்ளவோ கோருவது பொருத தப்பாடற்ற முடிவாகும். ஏனெனில் அக்குற்றச்சாட்டுக்கள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது பழிகூறுவதற்கோ அன்றி முரண் பட்டுக்கொண்டதற்காகவோ எழுந்தமானமாக முன்வைக்கப்பட்ட வையல்ல.

கண்காணிப்புக்குழுவினருக்கு சாட்சியங்கள் ஆதாரங்கள் என்பன பக்கச்சார்பற்ற தரப்பில் இருந்து பெறப்படுதல் அவசியமானதாக இருக்கலாம். அன்றித் தடயங்கள் அடிப்படையிலானதாக இருப்பது அவசியமாகலாம். ஆனால் அவ்வாறு அவை அவர்களுக்கு கிடைக் கப்பெறவில்லை என்பதற்காக குற்றச்சாட்டுக்கள் எழுந்தமான அடிப்படையில் முன்வைக்கப்பட்டவை எனக் கூறுவது தவறாகும். விடுதலைப்புலிகளும் தமக்குக் கிடைக்கும் தகவல்கள் அடிப்ப டையிலும், அவற்றிற்கான புறக்காரணிகள் அடிப்படையிலுமே குற்றச் சாட்டுக்களை உறுதிபடக்கூறுகின்றனர். காட்சிப்பொருட்களாக ஆதாரம் இல்லை என்பதற்காக குற்றச்சாட்டுக்களை ஆதார மற்றவை எனக் கொள்வது தவறாகும்.

ஆகையினால் விடுதலைப்புலிகள் தமது குற்றச்சாட்டுக்களைக் கைவிட்டு மனத்தை மாற்றிக்கொள்ளுதல் என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொன்று. இது விடுதலைப்புலிகளின் நம்பகத்தன்மை குறித்தும் கேள்வி எழவைப்பதாகிவிடும். புலிகள் அரசியல்வாதிகள் போன்று ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விட்டு, அதனை வைத்து அரசியல் நடத்தவிளைபவர்களும் அல்ல. என் பதைக் கடந்த காலவரலாறே வெளிப்படுத்தக் கூடியதாகும்.

ஆகையினால் விடுதலைப்புலிகள் மனத்தை மாற்றிக்கொள்வார்கள் என எதிர்பார்ப்பது தவறானதாகும். போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவிற்கு மாதாந்த சந்திப்புக்கள் இடம்பெறாமல் போனமை கவலை அளிப்பதாக இருக்கலாம். சந்திப்புக்கள் இடம்பெறா மையால் நிலைமை மோசமடையலாம் எனக் கருதலாம். இதற்காகப் புலிகள் மனம் மாற வேண்டும். விட்டுக்கொடுப்புக்களைச் செய்தல் வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானதாகும்.

ஏனெனில் மாதாந்த சந்திப்பு குழப்பத்திற்குள்ளாகியமைக்குக் காரணம் சிறிலங்காப்படைத்தரப்பினரின் நடவடிக்கைகளே என்பது வெளிப்படையானது. அதாவது கிழக்கில் சிறிலங்காப்படைத் தரப்புடன் இணைந்த தமிழ் தேச விரோதக் கும்பல்கள் புரிந்த ஆராஜகமே இச்சந்திப்புக்கள் இடம் பெறாமைக்கு முக்கிய காரண மாகும்.

சிறிலங்காப் படைத்தரப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகளுக்கு தான் காரணம் இல்லை என மறுக்கலாம் சரி இதனை உண்மை என எடுத்துக் கொள்வோம். அவ்வாறானால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிகழும் வன்முறைச் சம்பவங்களுக்கு யார் பொறுப்பு ? விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்கு தல்களுக்கு யார் பொறுப்பு?

இதற்குச் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு என்ன பதில் அளிக்க முடியும்? சிறிலங்காப் படைத்தரப்பு இதற்கு நேரடியாகவோ அன்றிப்பின்புலமாகவோ இல்லை எனில் இதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார் என்பதைக் கண்டறிவதற்காவது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு முயற்சிகளை மேற்கொண்டதா? அன்றி உத வியதா? முன்னைய மாதாந்தச் சந்திப்புக்களில்அளிக்கப்பட்ட வாக் குறுதிகள் ஆயுதப்படைத்தரப்பால் எந்தளவிற்குப் பேணப்பட்டன.

கண்காணிப்புக்குழுவைப் பொறுத்து மாதாந்தச் சந்திப்புக்கள் நடைபெறாது போனால் நிலைமை மோசமாகப் போய்விடும என் பதும் இதனால் யுத்த நிறுத்தம் பாதிப்புக்குள்ளாகிவிடும் என்பதும் கவலையாக இருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகளைப் பொறுத்தும் தமிழ் மக்களைப் பொறுத்தும் மாதாந்த சந்திப்புக்கள் நடந்தாலும் நிலை இவ்வாறே தொடர்ந்தால் தமிழ் மக்கள் பாது காப்பும் யுத்த நிறுத்தமும் அச்சுறுத்தலுக்குள்ளாகி விடும் என்பதே அபிப்பிராயமாகும்.

ஆகையினால் கண்காணிப்புக்குழு ஆதாரம் இல்லை எனக் கூறி விடுதலைப்புலிகளின் குற்றச்சாட்டை நிராகரிக்க முற்படுவதோ அன்றி விடுதலைப்புலிகளை விட்டு சந்திப்புக்களை நடத்துவதற்கு முன் வருவதையே தவிர்த்து உண்மைகளை உணர்ந்தறிதல் அடிப் படையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும். அதாவது இன்று கிழக்கில் வன்முறைக்கும் பதட்டத்திற்கும் யார் காரணம்? விடுதலைப்புலிகள் ஏன் மாதாந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள மறுக்கின்றனர் என்பதற்கான காரணிகளின் யதார்த் தத்தைக் காண முன்வரவேண்டும் .

# பட்டதாரிகள் வேலைவாய்ப்புத் திட்டம் ரத்துச் செய்யப்பட மாட்டாதென அறிவிப்பு

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கின்ற திட்டத்தை ரத்துசெய்யப்போவ தில்லையென அரசாங்கம் வலி யுறுத்தியுள்ளது.

இத்திட்டம் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட சீரான திட்டம் எனவும், இது வெற்றிகரமாக அமுல் செய் யயப் படுவதை விரும்பாத சிலர் மேற்கொள்கின்ற பிரச்சாரத்தில் எவ்வித நன்மையும் இல்லையென நிதித்துறை பிரதிஅமைச்சர் ரஞ்சித் சியம்பாப் பிட்டிய தெரிவித் துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட வேலை வாய்ப்புப் திட்டத்திற்கு நிதி ஒதுக் கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், விண்ணப்பதாரிகள் வேறு தொழில் செய்கின்றார்களா என் பதை அறிவதற்காக அவர்களிட மிருந்து உறுதி மொழிகளை பெறுகின்ற நடவடிக்கைகள் தற் போது மேற்கொள்ளப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# ஐ.தே.க.அமைச்சர்களின் பாவனைக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை

## ஐ.தே.க. பேச்சாளர் ரவீந்திர ரன்தெனிய

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அமைச் சர்களின் பாவனைக்கென எந்தவித வாகனங்களையும் தமது பதவிக் காலத்தில் இறக்குமதி செய்ய வில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ரவீந்திர ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களும் இரண்டு மாதங்களுமே நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களுக்கென புதிதாக எந்தவித வாகனங்களையும் இறக்குமதி செய்யவில்லை என் பதை தெளிவாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாகனங்களை இறக்குமதி செய் வதற்கான அனுமதியைத் திறை சேரி எங்களுக்கு வழங்கவில்லை. மாறாக தேவைக்கேற்ப வாகனங் களை வாடகைக்கு அமர்த்துமாறு அது தெரிவித்திருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு ஆட்சிக்காலத்திலேயே புதி தாக வாகனங்கள் இறக்கப்படுகின் றன என்றார்.

# பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர் இனந்தெரியாதவரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த நபரொருவர் இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார்.

"சென்ற ஞாயிறு போ-சுஜி" என்ற இந்த நபர் பொலஸ்கொட-வீர கெற்றிய எனுமிடத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாளஉலகக் குழுவின் தலைவர் "ஆமிஜினேயின் நெருங்கிய சகா வான இவர் கொலையை அடுத்துத் தலைமறைவாகிக் காட்டுப்பகுதியில தங்கியிருந்தார் என்றும் சம்ப வதினம் தனது பேத்தியாரைப் பார்ப்பதற்காக வெளியேவந்த போது மறைந்து நின்ற நபரொ ருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது பேரன் ஒருவரை சுட்டும், பேத்தியொருவரை கழுத்தை வெட் டியும் கொலை செய்தது உட்பட பத்து கொலைகளுடனும் ஐந்து பாலியல் வல்லுறவுச் சம்பவங்க ளுடனும் தொடர்புடையதாகப் பொலி சாரால் போ-சுஜி தேடப்பட்டு வந்த வராவார்.

பாலியல் வல்லுறவு தொடர்பான பழிவாங்கும் நடவடிக்கையாகவே இவரது கொலை இடம்பெற்றிருந்த காலம் என்றும் வீரகெற்றியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மனுத்தாக்கல்

(கொழும்பு)

தம்மைக்கட்சியிலிருந்து விலக்கி யமையை ஆட்சேபித்து சிறிலங்கா முஸ்லிம் பாராளுமன்ற உறுப் பினர்கள் மூவர் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். ஹுசைன் பைலா,நஜிப் ஏ.மஜீத் மற் றும் ரிஸாத் பதியுதீன் ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய் துள்ளனர். இந்த மனுவில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை வர் ரவூப் ஹக்கீம் உட்பட்டவர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள் ளனர். எனவே கடந்த மே மாதம் 30ஆம் திகதி தம்மை கட்சியில் இருந்து விலக்கியமையை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் மனுதாரர் கள் கோரியுள்ளனர். (32)

# சிறிலங்காவின் உல்லாசப்பயணத்துறை கடந்த மாதங்களில் பாரிய வீழ்ச்சி

சிறிலங்காவிற்கான உல்லாச பிரயாயணத்துறை பாரிய வீழ்ச்சியை கண்டு வருவதாக சிறிலங்காவின் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வருடம் மே மாதம் 30,162 பிரயாணிகள் மாத்திரமே சிறிலங்கா சென்றுள்ளதாக அமைச்சகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளன. 2004ஆம் ஆண்டில் இதுவே மிகக்குறைந்த பிரயாணிகளின் வரவு என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறிலங்காவின் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களே உல்லாசப் பிரயாணத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கு காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஹெலஉறுமய பிக்குகள் மீதான தாக்குதலை கண்டித்து களுத்துறையில் பாதயாத்திரை

அரசாங்க கட்சியினர் கடந்த பாரா ளுமன்ற அமர்வின் போது ஜாதிக ஹெலஉறுமயவின் கட்சிக்கு எதிராக செயற்பட்டதை கண்டிக் குமாறு கோரி ஹெலஉறுமய நேற்று பாதயாத்திரை ஒன்றை நடத் தியுள்ளனர்.

களுத்துரையிலிருந்து மொறட் டுவரை பாதயாத்திரையை நடத்தி யுள்ளனர். இப்பாதயாத்திரை மாலை 2.00 மணியளவில் முடி வடைந்தது. மீண்டும் நாளை இப் பாதயாத்திரை மொறட்டுவையிலி ருந்து களனி விகாரைக்குச்சென்று அங்கு மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இப்பாதயாத்திரைகளுக்கு எதிர் பார்த்தளவிற்கு மக்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (32)

# சனாதிபதி சந்திரிகாவின் உரைக்கு வாசுதேவ நாணயக்கார கண்டனம்

சனாதிபதி அண்மையில் கம்ப ளையில் ஆற்றிய உரை சனநாயக நாடொன்றில் இருக்கின்ற உண் மையான சனநாயக மரபுகளை மீறும் செயல் என புதிய சனநாயக கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தின் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை என்கிற பிரச்சினை எமக்குப் பாரிய பிரச் சினை இல்லையெனவும் எமக்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்துள்ள மையால் 2006 ஆம் ஆண்டு வரை தமது ஆட்சி நீடிக்குமென சனாதி பதி அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கருத்தை எதிர்க்கும் நோக்கில் நாட்டில் எதிர் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சனாதிபதிக்கு எதிராகப் போராட வேண்டுமென அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (32)

# விபத்தில் ஐவர் பலி

மகியங்கனையில் நேற்று இடம் பெற்ற விபத்தில் 05 பேர் உயிரிழந்துள்ளதுடன், 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் பயணிகள் பஸ் வண்டியும், வானும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்கள் அனைவரும் வானில் பயணித்தவர்கள் எனத்தெரியவருகிறது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கிளி.யில் வாணிப நிலையம் தீப்பிடித்து எரிந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியில் புடவை வாணிப நிலையமொன்று தீப்பிடித்து எரிந்ததில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமாகின.

மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது இது தொடர்பாக புடவை வாணிப நிலையத்தின் உரிமையாளர் தகவல் தருகையில் நேற்றுமுன்தினம் இரவு பத்துமணியளவில் வியாபாரத்தை முடித்துவிட்டு கடையின் கதவுகளை பூட்டியபின் தான் வெளிப்பகுதியில் நின்று கொண்டிருந்த வேளை கடையிலிருந்து புகை வெளிப்படுவதை கண்டு உடனடியாக உட்சென்று பார்வையிட்டபோது புடவைகள் அடுக்கி வைத்திருந்த ஒருபகுதி எரிந்து கொண்டிருப்பதை காணமுடிந்ததாகவும் உடனடியாக தீயணைப்பு முயற்சியில் ஈடுபட்டு தீயை அணைத்ததாகவும் குறிப்பிட்ட அவர் மின் ஒழுங்கின் காரணமாகவே தீப்பற்றியதாகவும் இதனால் பலலட்சம் பெறுமதியான புடவைகள் எரிந்துள்ளதாவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நகரப்பகுதிக்கு இலங்கை மின்சார சபையினர் மிக அண்மைக்காலமாக மின்வழங்கலை மேற்கொண்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச,லோ)


எரிந்தபகுதி

-யூரோக் கிண்ண கால்பந்துபோட்டி-

# இறுதிப் போட்டியில் விளையாட போர்த்துக்கல் தகுதி பெற்றது

யூரோ-2004 கால்பந்துப் போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் இன்றுஅதிகாலை நேரப்படி 12.15 மணிக்கு ஆரம்பமானது.

போட்டியை நடத்தும் போர்த்துக்கல் அணிக்கும் நெதர்லாந்து அணிக்கும் இடையில் நடைபெற்றது.

பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியில் சொந்த நாட்டு ரசிகர்களின் ஆதரவுடன் அபாரமாக விளையாடி 2-1என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

போட்டியின் 26ஆவது நிமிடத்தில் கிடைத்த கோனர் உதையை கிறிஸ்ரியான டொனால்டோ அலாதியான முறையில் கோல் ஆக்கினார்.

தொடர்ந்து 38ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் மனிச்சே கோல் ஒன்றை அடித்து 2-0 என்ற நிலையில் போத்துக்கல்லை முன்னிலைப்படுத்தினார்.

63ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் ஜோச் அன்றே தடுக்க முயன்ற பந்து நெதர்லாந்து அணிக்கு கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தும் இன்று நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டியில் போர்த்துக்கல்லை எதிர்த்தாடும்.

## கப்பம்...

ஊர்திகள், மற்றும் உழவு இயந்திரங்கள் வியாபாரிகளிடமே இராணுவத்தினர் கப்பம் கேட்டு மகளை துன்புறுத்தி வருகின்றனர்.

இதன்போது பொதிகளைக் கடுமையாகச் சோதனை இடும் படையினர் கப்பம் கொடுக்க மறுப்போரை நீண்டநேரம் தடுத்து வைப்பதோடு எச்சரிக்கையும் விடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

-ஜாதிக ஹெல உறுமயவுக்குள் பிளவு -

# கட்சி தடம் மாறிவிட்டதாக எதிர்ப்பாளர்கள் குற்றச்சாட்டு

ஜாதிகஹெல உறுமயவிற்குள்ளே மாற்றுக் குழு ஒன்று உருவாகியுள்ளது.

ஏற்கனவே அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் ஆதரவளித்த இரண்டு பாராளுமன்ற பௌத்த பிக்குகளே இம் முயற்சியை மேற்கொண்டுள்ளனர் .ஹெலஉறுமய கொள்கையின் அடிப்படையில் செயற்படவில்லையென இவர்கள் நடத்திய கூட்டத்தில் கூறியுள்ளார். அது பல்வேறு கொள்கையின் அடிப்படையில் செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே ஹெலஉறுமய வந்த பாதை தற்போது வழி மாறி போய் விட்டதாக மாற்றுக் குழு குற்றம் சாட்டியுள்ளது. (32)

## அடுத்த ஆண்டிலேயே சம்பள உயர்வு

அடுத்த ஆண்டு சன்வரி மாதத்திலிருந்து பொலிசார் உட்பட அனைத்து அரச ஊழியர்களின் சம்பள கொடுப்பனவு அதிகரிக்கப்படுமென சனாதிபதி உறுதியளித்துள்ளார். நேற்று சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற 3000 பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் இதனை தெரிவித்துள்ளார்.

## தொண்டமானை....

புள்ளே சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் பணிப்புக்கிணங்க ஆறுமுகம் தொண்ட மானுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் முடிவுற்றபின்பே இவ்வாறான ஒரு சந்திப்பிற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த போதும் பாராளுமன்ற அமர்வை விரைவில் எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வருவதையடுத்து நடந்த இச்சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லயனல் பலகல்ல...

பத்தேழாம் ஆண்டு இரண்டாவது லெப்டினனாக பதவி உயர்வு பெற்று படிப்படியாக பதவி உயர்வு பெற்ற இவர் இரண்டாயிரமாம் ஆண்டு ஒகஸ்ட் 24ஆம் திகதி சிறிலங்கா வின் 16ஆவது இராணுவத்தளபதியாக நியமனம் பெற்றார்.

இதேவேளை இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு ஒருங்கிணைக்சப்பட்ட படைகளின் தளபதியாகவும நியமனம் பெற்றுத் தனது நாற்பதாவது ஆண்டுகால சேவையின் பின்னர் தனது பதவியில் இருந்து நேற்று ஓய்வு பெற்றார்.

## கருணாவை...

களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

சனாதிபதியும் அரசாங்கமும் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச்செல்வதில் ஆர்வமாக இருந்தால் கருணாவை வைத்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களுக்கும், யுத்த நிறுத்த சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கின்ற காரியங்களை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதே எங்கள் தலைமைப் பீடத்தினுடைய கரிசனையாக இருக்கின்றது என்பதை நாங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம். மற்றது சமாதான முன்னெடுப்புக்களை தொடர்வதாக இருந்தால் ஏற்கனவே நாங்கள் எங்களுடைய தலைமைப் பீடத்தினுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக முன்வைத்திருக்கின்றோம். அவற்றை நாங்கள் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

** இடைக்கால நிர்வாக சபை யின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க சந்திரிகா தயாராக இருப்பதாகச் செய்திகள் வெளியா கின. இது பற்றி தூதுக்குழுவின நூடாக தகவல் ஏதும் கிடைக்கப் பெற்றதா?*

அவர்களும் ஊடகங்களினூடாகத் தான் இந்தச் செய்தியை அறிந்திருக்கிறார்கள். இன்னமும் அதிகார பூர்வமாக அந்தச் செய்தி நோர்வேத் தரப்புக்கு கொடுக்கப் பட வில்லை. எங்களைப் பொறுத்த வரையில் ஏற்கனவே இது பற்றித் தெளிவாக எங்களுடைய நிலைப் பாடுகளை முன்வைத்திருக்கின் றோம்.புதிதாக இன்று கருணாவும், கருணாவின் ஒரு சில அடியாட்களையும் வைத்துக் கொண்டு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் யுத்த நிறுத்தச் சூழலையும் சமூக சூழலையும் குழப்பி சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்துகின்ற சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றைத் தடுப்பதற்கான - இவற்றுக்கு முடிவு கட்டுவதற்கான- நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதற்கூடாகவே நிலைமைகளை சுமூகமாக்கிக் கொள்ளலாம் என்பதனை வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகவே எங்களைப் பொறுத்த வரையில் எமது தலைமைப்பீடம் ஏற்கனவே முன்வைத்த எமது நிலைப்பாடுகளில் எதுவித மாற்றமும் இல்லை. புதிதாக அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலைக்கும் இவர்கள் விரைவில் தீர்வு காண வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

**இந்த சமாதானப்பேச்சு இடைநிறுத தப்பட்டதற்கான காரணங்கள் குறித்து அரசாங்கத்திற்குஏதாவது அறிவித்துள்ளீர்களா?*

நிச்சயமாகக் கண்காணிப்பு குழுவூடாகவும் எமது தலைமைப் பீடத்தின் அதிருப்தியையும், கரிசனையையும் தெரியப்படுத்தியிருக்கிறோம். அதே போன்று இன்று அனுசரணையாளர்களான நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் அவர்களுக்கும் நோர்வேத் தூதுவரிடமும் இதை விளக்கமாகவும் ஆணித்தரமாகவும், உறுதியாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**அண்மைக்காலத்தில் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வுக்காக புனர்வாழ்வு அமைச்சுடன் 25 பேர் கையெழுத்திட்டு 835மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் டோக்கியோ பேச்சுக்கமைய தான் இந்நிதி கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளார்கள். இது இடைக்கால நிர்வாக சபைக்கூடாகவே நிதி பகிரப்பட வேண்டும் என்பதற்கு எதிராக செயற்படுவதான தன்மை தோன்றியுள்ளது இதுபற்றி உங்கள் கருத்து என்ன?*

நாங்கள் நன்கொடையாளர்களுக்கு தெளிவாக கூறியிருக்கின்றோம். எமது தாயகப் பிரதேசத்தில் வடக்குகிழக்கு பிரதேசத்திலே முன்னெடுக்கப்படும் எந்த புனர்வாழ்வு அபிவிருத்தி மீள்குடியேற்றம் என்ற எந்த வேலைத்திட்டமாக இருந்தாலும் அது இங்கே உருவாக்கப்படப் போகின்ற ஒரு காத்திரமான கட்டமைப்பினூடாகவே முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதையும் இலங்கை அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கையற்றிருக்கின்ற நிர்வாக அமைப்புகளுக்கூடாக முன்னெடுக்கப்படுவதை ஒருபோதும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நன்கொடையாளர்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். நோர்வேத்தரப்பினருக்கும் தெரியப் படுத்தியிருக்கின்றோம். ஆகவே அண்மைக்காலத்திலே உலக வங்கி ஐரோப்பிய யூனியன் போன்ற நிதிநிறுவனங்கள் அளித்த உத்விகள் டோக்கியோவிலேயே உறுதியளிக்கப்பட்ட நிதியிலிருந்து அளிக்கப்பட்டதாக எங்களுக்கு எந்த செய்தியும் கிடைக்கவில்லை. நாங்கள் அப்படியான ஊடகங்க ளுக்கூடாக வந்த அந்த செய்தி பற்றி அவர்களிடம் கேள்வி எழுப்பி இருக்கின்றோம். அவர்கள் அதற்கு மறுத்திருக்கின்றார்கள். நிச்சயமாக அங்கே உறுதியளிக்கப்பட்ட நிதி இந்த சமாதான முன்னெடுப்புகளினுடைய முன்னேற்றத்தின் அடிப்படையில் தான் அது அளிக்கப்படும் என்பதை மீண்டும் எங்களுக்கு கூறியிருக்கின்றார்கள். ஆகவே ஊடகங்களினுடைய செய்தியை வைத்துக்கொண்டு எங்களால் உறுதியான கருத்தை முன்வைக்க முடியாது.

**நோர்வேத் தூதுவர் இதற்கு முதன்முறையும் பலதடவை வந்துபோயிருக்கின்றார். அதனடிப்படையில் இதுவரை ஏதேனும் குறைந்த பட்சமான இணக்கப்பாடுகளாவது எட்டப்பட்டதா?*

எங்களுடைய நிலைப்பாட்டை இன்று அறிந்து கொண்டு போகின்றார். அவர் பிரதமரையும் சனாதிபதியையும் சந்திக்க விருக்கின்றார்கள். அரச தரப்பிலுள்ள முடிவெடுக்கின்ற தலைமைகளை இனித்தான் அவர்கள் சந்திக்க இருக்கின்றார்கள். ஆகவே அவர்களுடைய சந்திப்பின் பின்னர் தான் இதில் ஏதாவது சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை நாங்கள் அறிய முடியும்.

**நோர்வேத் தூதுவர் மீண்டும் வன்னிக்கு வருவதற்கான திட்டம் உள்ளதா?*

நோர்வேத் தூதுவர் இந்தச் சந்திப்புக்கள் முடிந்த பின் மீண்டும் வரவிருப்பதாக எங்களுக்குக் கூறியுள்ளார்கள்.

**நோர்வேத் தூதுவர் முதலில் உங்களை சந்தித்தபின் சனாதிபதியை சந்திக்கப்போயுள்ளார். ஆகவே இந்த பேச்சுவார்த்தைகள் தாமதமாவதற்குரிய தாமதம் யார் பக்கம் உள்ளது?*

தாமதம் வெளிப்படையாக தெரிந்த உண்மை அது அரச் தரப்பின் கையிலேயே தான் உள்ளது. எங்களைப் பொறுத்தவரை எங்களது நிலைப்பாடுகள் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. நாங்கள் எந்த அடிப்படையில் பேசத் தயாராக இருக்கின்றோம் என்பதையும் எங்களது தலைமைப் பீடத்தினுடைய நிலைப்பாடுகளையும் நாங்கள் அவ்வப்போது தெரியப்படுத்தி வருகின்றோம். ஊடகங்களுக்கூடாக எல்லா மக்களுக்கும் சென்றடைகின்றது. ஆகவே எங்களின் நிலைப்பாடு தெளிவானதும், உறுதியானதும் ஆகும். ஆகவே பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ளுகின்ற முழுப்பொறுப்புமே இன்று அரசின் கையிலே தான் தங்கியிருக்கின்றது. அதை நோர்வே அனுசரணையாளர்களும் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். சர்வதேச சமூகமும் அதை விளங்கிக்கொண்டுள்ளது.

**அரசாங்கத்தின் மீது உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?*

எங்களை பொறுத்த வரை அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்திகளை இன்று வெளிப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே அதில் மாற்றங்கள் வரவேண்டும் முன்னேற்றங்கள் வருகின்ற அடிப்படையில் தான் சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

**கருணா விடயத்தில் மகேஸ்வரனுக்கு தொடர்புள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அது பற்றி உங்கள் கருத்து என்ன?*

எங்களை பொறுத்த வரையில் ஊடகங்கள் ஊடாகப் பல செய்திகள் வருகின்றது. பலர் தாங்கள் உதவி செய்ததாக ஒத்துக்கொள்கிறார்கள். சிலர் மறுக்கிறார்கள் எனப் பலவிதமான செய்திகள் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதில் எது உண்மை என்பதை அங்கிருந்து தப்பி வந்தவர்களின் வாக்கு மூலங்களை வைத்துக் கொண்டுதான் நாங்கள் முடிவுகளை எடுக்கலாம். அது தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மிகவிரைவிலே அது சம்பந்தப்பட்டவர்களை நாங்கள் வெளிப்படுத்துவோம். வெளிப்படுத்தியும் விட்டார்கள். ஆகவே மகேஸ்வரனுக்கு இதில் தொடர்பிருக்கின்றதென்ற வாக்கு மூலங்களோ, செய்திகளோ தகவல்களோ கிடைக்கவில்லை.

**தமிழரசுக்கட்சி பாராளுமன்றத்தில் வாக்களித்தது ரனில் அரசுக்கு அந்தக் காலப்பகுதியில் தான் அவர்கள் கருணாவைக் கொழும்பிற்கு கொண்டு வருவதற்கான முயற்சியைச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு போர் நிறுத்த உடன்படிக்கை செய்தவர்களே இரண்டு வேடம் போட்டு செயற்படுகிறார்கள். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?*

இன்று ரணில் விக்கிரமசிங்க எங்களுக்கு ஒரு செய்தியை அனுப்பியிருக்கின்றார். அதாவது தனக்கோ தனது கட்சிக்கோ தெரியாமல் தான் அலிசாகிர் மௌலானா எனும் தனிமனிதனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனவும் அதனை எமது தலைமைப் பீடத்திற்குத் தெரியப்படுத்துமாறும் நோர்வே அனுசரணையாளருடாக எமக்கு சொல்லியிருக்கின்றார்.

**மாகாண சபைத்தேர்தல் தொடர்பாகத் தெற்கில் வாழும் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

தெற்கில் வாழும் மக்கள் தங்களுடைய எதிர்காலம் ஒளிமயமாவதற்கு ஏற்ற வகையில் சிந்தித்து வாக்களிக்க வேண்டுமென்பது தான் நாங்கள் அந்த மக்களுக்கு சொல்லுகின்ற செய்தி என்றார்.

நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் காலை 11.00 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பில் நோர்வே தூதுக்குழுவினர் சார்பாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிரஸ்கார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் இச்சந்திப்பு 1.00 மணிவரை நீடித்தது.

முன்னதாக காலை 10.00 மணியளவில் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த இக்குழுவினரை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் கைலாகு கொடுத்து வரவேற்றிருந்தனர். (லோ,ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.